விலை: 50.00
பக்கங்கள் - 16
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 051 வள்ளுவர் ஆண்டு 2056 தை 26 சனிக்கிழமை (08.02.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
021 720 1005

இல.144.
பிறவுன் வீதி.
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/=

## அநுரவுக்கு பின்புலமாக இலங்கை இராணுவம்!

### தெற்கில் புதிய சர்ச்சை

(கொழும்பு)

அநுர ஜனாதிபதி கதிரையில் அமர அவருக்கு உறுதுணையாக இருந்த ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரிகளின்

15

## ஊடகவியலாளர் லசந்த படுகொலை நீதி நிலைநாட்டப்படும் - பிரதமர்



(கொழும்பு)

ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்கவின் படுகொலைச் சூத்திரதாரிகளை சட்டமா அதிபர் விடுவிக்க முனைந்தமை பாரிய அதிர்வலைகளை ஏற்படுத்திய நிலையில், லசந்த படுகொலைச் சம்பவத்துக்கான நீதி நிலைநாட்டப்படும் என அரசு உத்தரவாதமளித்துள்ளது.

15

### வெள்ளை ஈ வேகமாகப் பரவுகிறது

# ஒட்டுமொத்த தென்னைகளும் அழிவடையும் அபாயத்தில்



### தென்னஞ் செய்கையாளர்கள் அச்சத்தில்

*(யாழ்ப்பாணம்)* வட மாகாணத்தில் உள்ள தென்னை மரங்களில் வெள்ளை ஈ தாக்கம் வேகமாகப் பரவி வருகிறது. இதனால் ஒட்டுமொத்தத் தென்னை மரங்களும் அழிவடையும் அபாயத்தை எதிர்கொண்டுள்ளன. *(15ஆம் பக்கம் பார்க்க)*

## அரிசி விலை குறையும்

### பிரதி அமைச்சர் உறுதி

(கொழும்பு)

விவசாயிகளிடமிருந்து நிர்ணய விலையின் கீழ் கொள்வனவு செய்யப்படும் நெல்லை அரிசியாக்கி, தற்போதைய சந்தை விலையை விட குறைந்த விலையில் நுகர்வோருக்கு

15

## இலங்கையின் பாதுகாப்புக்கு இந்தியா துணை நிற்கும்

### இந்திய உயர்ஸ்தானிகர்

(கொழும்பு)

இலங்கையின் தேசிய பாதுகாப்பை

15


இலங்கையில் முதன்முறையாக!
வடக்கு கிழக்கு தமிழ் பேசும் மாணவர்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு!
UK மாணவர் வீசா - உங்கள் கனவை நனவாக்குங்கள்!
14.02.2025 - 17.02.2025
No. 158, Hospital Road, Jaffna
✔ 100% இலவச நிதி ஆதார சேவை (100% Free Show Money)
✔ 100% இலவச சேவை (100% Free Student Visa Service)
✔ க.பொ.த (O/L) ஆங்கிலத்தில் C சித்தி போதுமானது (IELTS Waivers)
✔ £10,000 வரையிலான பல்கலைக்கழக உதவித்தொகை! (Scholarships)
UK- க்கு மாணவர் வீசாவில் உங்கள் குடும்பத்தையும் IELTS & Proposal இல்லாமல் அழைத்துச் செல்லலாம்!

DREAM DESTINATION
Your Travel Partner
077 129 2638 / 076 822 2022 / 021 222 2893
(3354)

நடுவு நிலை தவறாத நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 1947 - 06 - 08 | 2025 - 02 - 07 |

## செல்லத்துரை துரைராஜா

இமையாணன் உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை துரைராஜா அவர்கள் நேற்று (07.02.2025) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை - ஆத்தைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற நடராசா - விசாலாட்சி தம்பதியரின் அன்பு மருமகனும் சுசீலாதேவியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான ராஜேஸ்வரி, சபாநாயகம் மற்றும் தங்க ரத்தினம் ஆகியோரின் சகோதரனும் அருள்ராஜ், பிரதீபன், சுவர்னா, கஜானனன் ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும் பாஸ்கரன், துஷ்யந்தினி, விக்னேஸ்வரன், ரஜீவன், சயந்தன், நிரோ ஆகியோரின் மாமனாரும் பிரதாப், சோபனா, கல்பனா, வத்ஷலா, மதுசன் ஆகியோரின் பெரியப்பாவும் தர்மிகா, விசானன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அன்னாரது இல்லத்தில் நாளை (09.02.2025) ஞாயிற்றுக்கிழமை நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக நண்பகல் 12.00 மணியளவில் வல்லை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

செல்வம்மில் வீதி,
இமையாணன், உடுப்பிட்டி.

(C-2222)

தகவல்:
குடும்பத்தினர்

**யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்**
**தரம் - 06 இற்கான புதிய அனுமதிகள்(2025)**

யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் 2025 ஆம் ஆண்டுக்கான தரம் 06 அனுமதி விண்ணப்பப் படிவங்கள் தற்போது வழங்கப்படுகின்றது. பாடசாலை நேரத்தில் அலுவலகத்தில் பெற்று எதிர்வரும் 14.02.2025 வெள்ளிக்கிழமைக்கு முன் அலுவலகத்தில் ஒப்படைக்கவும்.

**குறிப்பு : எமது பாடசாலை பழைய மாணவர்களினால் பின்வரும் வசதிகள் செய்து தரப்படும்.**


1. தரம் 6 இல் இணைந்துகொள்ளும் அனைவருக்கும் அப்பியாசக்கொப்பிகள், கணித உபகரணப்பெட்டி, புத்தகப்பை என்பன இலவசமாக வழங்கப்படும்.
2. புலமைப் பரிசில் சித்தியடைந்த வெளிமாவட்ட மாணவர்கள் விடுதியில் தங்கியிருந்து இலவசமாகக் கற்பதற்கான வசதிகள் செய்து தரப்படும்.

(C-2218)

அதிபர்,
யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்.

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378 | 076 097 3127

## 26 ஆம் ஆண்டு நீங்கா நினைவலைகள்



அமரர் கிருஷ்ணபிள்ளை ராஜ்குமார் (B.FA)

| தாய் மடியில் | அரண் அடியில் |
|---|---|
| 31.03.1969 | 08.02.1999 |

திதி : அபரபக்க அட்டமி

எத்தனை ஆண்டுகள் ஆனாலென்ன
இத்தரை மீதிலே இன்னினைவாய்
நித்தியம் நினைத்திருப்போம்
நித்தமும் கைதொழுவோம்

(C-2219)

குடும்பத்தினர்

கரவெட்டி மேற்கு,
கரவெட்டி.
021 226 1312

# மரண அறிவித்தல்



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 08.03.1930 | 05.02.2025 |

## நடராசா சிவபாக்கியம்

இணுவில் கிழக்கு சிவகாமி அம்மன் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா சிவபாக்கியம் கடந்த (05.02.2025) புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - சின்னம்மா தம்பதியினரின் பாசமிகு மகளும் காலஞ்சென்றவர்களான தம்பு - பாக்கியம் தம்பதியினரின் மருமகளும் காலஞ்சென்ற நடராசா அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கந்தையா, சுப்பையா, தங்கரத்தினம், கதிரவேலு ஆகியோரின் சகோதரியும் நவரத்தினராசா(சிவபாக்கியம் மண்டப உரிமையாளர்), காலஞ்சென்ற சிவலோகநாதன்(கிளி) மற்றும் சண்முகராசா (ராசா), சிவகாமசுந்தரி(தேவி), காலஞ்சென்ற ஸ்ரீசுந்தராசா மற்றும் மகேஸ்வரி, ஸ்ரீ ரஞ்சன்(சுவிஸ்), செல்வராணி(ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் புஸ்பராணி, தங்கரத்தினம், கிருஷ்ணபாமா, காலஞ்சென்றவர்களான யோகராணி(மாலா), நாகநாதபிள்ளை மற்றும் சாந்தி, கந்தசாமி, தனருக்ஷா, குலசேகரம் ஆகியோரின் மாமியாரும் காலஞ்சென்றவர்களான அப்பையா, சோமசுந்தரம், குமாரசாமி, அன்னலிங்கம், செல்வம், மகேஸ்வரி, சுப்பலட்சுமி, மல்லிகாதேவி ஆகியோரின் மைத்துனியும் சிவரூபன் கலைமதி, கோகிலவதனி கஜேந்திரன், ஜெகன் ஆதித்தியா, கோகிலப்பிரியா உத்தமன், சுகி நவரத்தினராசா, சுதன் சிந்துஜா, சுரேஸ்குமார் பாமினி, விசாகினி மயூரதன், கஜேந்திரன் திருவருட்செல்வி, மயூரதன், ரவீந்திரன் சாலினி, ராஜிகரன், மகிந்தன் சிந்துஜா, கஜனி, வினோதினி பகிரதன், வினோதீபன் துர்க்காயினி, வினோராஜ் பிரியங்கா, துஷாயினி நவரூபன், கபிலன், கௌசிகன், அனுராதா, லஜிதா சரவணன், பவித்திரா விஜிதன், சிதர்ஷனா, சிலக்ஷன், வானவி, விதுஷன், ரஜினா, சங்கர் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் நேத்ரன், வியாசன், மித்திரன், அட்சயன், அபிசயன், அனுஸ்ரீ, ஆராத்தியா, கருணியா, சிவானியா, துஷிகா, சுஜீபன், சுதிக்சன், தியான், கபிஷன், துஷாந்த், ரக்ஷன், அனாவிகா, அஸ்விகா, லாருஜன், ஹரிணி, சாஜகா, கபிநயா, விஷால், அபிசா, அஸ்வரன், ஆதிசன், அக்ஷரன், சந்தோஷ், ஆகாஷ், மதனன், அபிநயன், புகழன், அதிசயா, அதிசா, தனிஷா, அபிலாஷ், விஷோன், சுஷிகா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.02.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

சிவகாமி அம்மன்கோவிலடி,
இணுவில் கிழக்கு, இணுவில்.

077 959 7082
077 677 2100

(3361)

தகவல் :
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதார மாற்றம் முன்னே அரசியலமைப்பு மாற்றம் பின்னே

## ரணிலின் பாணியில் அநுர அரசு அறிவிப்பு



முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைப் போன்றே தேசிய மக்கள் சக்தி அரசாங்கமும் பொருளாதாரக் காரணிகளை முன்னிறுத்தி அரசியலமைப்பு மாற்றம் இனப்பிரச்சினைக்கான தீர்வை பின்னடிப்புச் செய்வதாக விமர்சனங்கள் எழுந்துள்ளன.

புதிய அரசியலமைப்பு குறித்து அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் அமைச்சர் நலிந்த ஜயதிஸ்ஸ கருத்து வெளியிடுகையில்,

தேசிய மக்கள் சக்திக்கு மக்கள் வழங்கிய ஆணையின் பிரகாரம் புதிய அரசியலமைப்பொன்று நிச்சயமாகக் கொண்டுவரப்படும். ஆனால், அவசரமாக இந்தச் செயற்பாடு இடம்பெறாது.

"நாட்டின் தற்போதைய நிலவரத்துக்கு இணங்க பொருளாதாரத்தைப் பலப்படுத்தி நாட்டை ஸ்தீரப்படுத்துவதே அரசாங்கத்தின் பிரதான நோக்கமாகும்.

அரசாங்கம் ஆட்சிக்கு வந்து இரண்டரை மாதங்களே ஆகின்றன. நாடு எதிர் கொள்ளும் பொருளாதாரச் சவாலை வெற்றி கொள்வதே தற்போதைய பிரதான தேவையாகவுள்ளது. நாட்டின் பொருளாதாரத்தை முதலில் சீரான நிலைமைக்குக் கொண்டுவர வேண்டும். அதற்கு இன்னும் சில காலங்கள் தேவைப்படும்.

சர்வதேச ரீதியாகவும் அரசாங்கத்துக்குப் பல சவால்கள் காணப்படுகின்றன. எனினும் நேரத்தை இழுத்தடிக்காமல் உரிய காலத்தில் புதிய அரசியலமைப்பைக் கொண்டுவர நடவடிக்கை எடுப்போம். இப்போதே அந்தப் பணியையும் ஆரம்பித்து ஏனைய பணிகளை குழப்பிக் கொள்ளத் தேவையில்லை.

எமக்கு வழங்கப்பட்டுள்ள மக்கள் ஆணையின் பிரகாரம் நிச்சயமாக அரசியலமைப்பில் மாற்றமொன்று இடம்பெறும். ஆனால், அவசர அவசரமாக அரசியலமைப் பொன்றை உருவாக்கப் போவதில்லை" என்றார். (ந-7)

# இ.போ.ச சாரதி மீது வாள்வெட்டுத் தாக்குதல்

## விசுவமடுவில் பயங்கரம்

யாழ்ப்பாணத்திலிருந்து முல்லைத்தீவு நோக்கிப் பயணிகளை ஏற்றிச்சென்ற இலங்கைப் போக்குவரத்துச் சபைப் பேருந்துச் சாரதி மீது விசுவமடுப்பகுதியில் வைத்து இனந்தெரியாத நபர்களால் வாள்வெட்டுத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. தாக்குதலுக்கு இலக்கான சாரதி படுகாயங்களுக்குள்ளான நிலையில் தருமபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

குறித்த பகுதியில் பயணிகளை இறக்குவதற்காக பேருந்தை நிறுத்தியபோதே குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதன் காரணமாக பேருந்தில் பயணித்த பயணிகள் நடு வீதியில் நீண்ட நேரமாகக் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. சம்பவம் தொடர்பாகப் புதுக்குடியிருப்புப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ந-7,316)

# கிளி. மேல் நீதிமன்றில் வாகனங்கள் ஏலத்தில்

கிளிநொச்சி மேல் நீதிமன்றத்தினால் பறிமுதல் செய்யப்பட்ட வாகனங்கள் இன்று ஏலத்தில் விடப்படவுள்ளன.

இது தொடர்பில், கிளிநொச்சி மேல் நீதிமன்றம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

குறித்த அறிக்கையின் படி, பறிமுதல் செய்யப்பட்டதும் இதுவரை உரிமை கோரப்படாததுமான வாகனங்கள் இன்று (08.02.2025) காலை 9.00 மணிக்கு நீதிமன்ற வளாகத்தினுள் பகிரங்க ஏல விற்பனை மூலம் விற்கப்படவுள்ளன.

மேலும், ஏலவிற்பனைக்கு உட்படுத்தும் பொருட்களை உரிமை கோருபவர்கள் யாராவது இருக்குமிடத்து ஏலவிற்பனை ஆரம்பமாவதற்கு ஒரு மணித்தியாலயத்திற்கு முன்னர் தமது கோரிக்கையை சமர்ப்பித்தல் வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை ஏலவிற்பனைப் பொருட்களை, ஏலவிற்பனை ஆரம்பமாவதற்கு அரை மணித்தியாலயத்திற்கு முன்னர் இம்மன்றின் பதிவாளரின் அனுமதியுடன் பார்வையிட முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-7,315)

# மலையகத் தமிழர்களுக்கு பிரஜாவுரிமை வழங்கப்படும்

## தேசிய மக்கள் சக்தி அரசு உறுதி



மலையகத்தமிழர்கள் தே.ம. சக்தியின் ஐந்து ஆண்டு கால ஆட்சிக்குள் இலங்கையின் முழுமையான பிரஜைகளாக மாறுவர் என பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு அமைச்சர் சமந்த வித்தியாரத்ன தெரிவித்தார்.

"மலையக மக்கள் பல்வேறு துன்பங்களுக்கு மத்தியில் வாழ்ந்து வருகின்றனர். அவர்களுக்கென அடிப்படை வசதிகள் இல்லை. அவர்களும் இந்த நாட்டின் பிரஜைகள்தான்.

அதிகளவானவர்கள் அடையாள அட்டையின்றியுள்ளனர். பிறப்புச் சான்றிதழ் இன்றியும் இருக்கின்றனர். கிளீன் ஸ்ரீலங்காத் திட்டத்தின் கீழ் குறிப்பிட்ட சில லயன் பகுதிகளை மறுசீரமைக்கும் பணிகள் ஆரம்பமாகியுள்ளதுடன், அதனுடன் இணைந்து அவர்களுக்குப் பிறப்புச் சான்றிதழ், அடையாள அட்டையை பெற்றுக்கொடுக்கும் பணியும் ஆரம்பமாகியுள்ளது. பாதை வசதிகள் இன்றி பெருந்தோட்ட மக்கள் இக்கட்டான நிலையில் உள்ளனர். பெருந்தோட்டக் கம்பனிகளின் இடம் என்பதால் அங்கு பாதை வசதிகளைச் செய்ய முடியாதென கடந்த அரசாங்கங்கள் கூறின. இவர்கள்தான் அந்த உடன்படிக்கையைச் செய்தனர். என்றாலும், பாதைகள் செய்யப்படுவதன் ஊடாகப் பெருந்தோட்ட நிறுவனங்கள்தான் அதிக நன்மையடையும் என நினைக்கிறோம். கட்டம் கட்டமாக அவர்களுக்கான பாதை வசதியை ஏற்படுத்திக் கொடுக்க நடவடிக்கை எடுப்போம்.

அந்த மக்களுக்கு இன்னமும் முகவரி இல்லை. தபால் திணைக்களத்துடன் இணைந்து விரைவில் அவர்களுக்கு முகவரியை பெற்றுக்கொடுக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. வீடுகள் அரசியல் நோக்கங்களின் அடிப்படையிலேயே கடந்த காலத்தில் வழங்கப்பட்டிருந்தன. பலர் தமது வீடுகளை விற்றுள்ளனர். எதிர்காலத்தில் கட்டப்படும் வீடுகள் முதல் கட்டமாக மண் சரிவை சந்தித்துள்ள மற்றும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ள மக்களுக்கே வழங்கப்படும் என்றார். (ந-7)

# மின்சாரம் தாக்கியதில் சிறுமி உயிரிழப்பு

புளியங்குளம், பழையவாடிப் பகுதியில் நேற்று மின்சாரம் தாக்கியதில் சிறுமி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

சம்பவத்தில் புளியங்குளம், பழையவாடிப் பகுதியைச் சேர்ந்த ந.மதுசாளினி (வயது - 6) என்ற சிறுமியே மரணமடைந்தவராவார்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

வவுனியா வடக்கு, புளியங்குளம், பழையவாடிப் பகுதியில் உள்ள வீடொன்றில் 6 வயதுச் சிறுமி கொய்யா மரத்தில் ஏறி விளையாடியுள்ளார். தவறுதலாகக் கீழே விழுந்த போது நீர் இறைக்கும் இயந்திரத்திற்குச் சென்ற மின்சார வயரின் இணைப்பில் சிறுமி சிக்கியதால் சிறுமி மீது மின்சாரம் தாக்கியுள்ளது.

வீட்டார் குறித்த சிறுமியை மீட்டு வவுனியா வைத்தியசாலைக்குக் கொண்டு சென்ற போதும் சிறுமி வைத்தியசாலைக்கு வருவதற்கு முன்னரே மரணமடைந்துள்ளதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் புளியங்குளம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ந-7,250)


## காணி விற்பனைக்குண்டு

**யாழ்ப்பாணம் வடமராட்சி உடுப்பிட்டியில் 10 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.**

- 2 பரப்பாகவும் 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- உடுப்பிட்டி சன்னதி கோயில் செல்லும் பிரதான காபற் வீதி முகப்புடன்
- நல்ல சூழல், நன்னீரூற்று, நிலப்பரப்பு
- பொக்கன் சந்திக்கு அருகாமையில் உடுப்பிட்டி வாசிக சாலை சந்தி 300 மீற்றர் தூரம்
- சன்னதி முருகன் கோயில் 2 கிலோமீற்றர் கெருடாவில் கந்தசாமி கோயில் 200 மீற்றர் தூரம்
- வழி இலக்கம் 751 மற்றும் 767 அரச, தனியார் பேருந்து செல்லும் பிரதான காபற் வீதி
- பார்வையிடும் நேரம் : காலை 8 மணி முதல் மாலை 6 மணி வரை

தொடர்புகளுக்கு :

077 288 0152, 076 017 1105

(3364)



## நயினை அம்மன் திருமண சேவை

சகல சமூகத்தினருக்குமான விரைவான உள்நாட்டு, வெளிநாட்டு திருமண சேவை. டச்சு வீதி, கல்வியங்காடு. பதிவுக்கட்டணம் இலவசம்

Whatsapp: 076 050 3863 ... 9485

(820)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐ.நா மனித உரிமைகள் பேரவையிலிருந்து

# அமெரிக்கா வெளியேறுவது

# இலங்கை அரசிற்கு சாதகமாகும்

### சட்ட நிபுணர் கலாநிதி பிரதிபா மஹாநாம ஹேவா

(கொழும்பு)

**ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையில் இருந்து விலக அமெரிக்கா எடுத்த தீர்மானம் இலங்கை அரசாங்கத்திற்கு சாதகமாக அமையும் என சட்ட நிபுணர் கலாநிதி பிரதிபா மஹாநாம ஹேவா தெரிவித்துள்ளார்.**



எதிர்வரும் 24 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் 58 ஆவது அமர்வில் இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்பட்ட தீர்மானத்தை சவாலுக்கு உட்படுத்துவதற்கு இந்த மாற்றமானது ஒரு வாய்ப்பாக அமைந்துள்ளது என அவர் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கை மீது போர்க்குற்றம் சுமத்தப்படுவதிலும், மேற்கத்தேய நாடுகளின் ஆதரவுடன் கூடிய கலப்பு நீதிமன்றங்கள் போன்ற பொறிமுறைகளுக்காக வாதிடுவதிலும் அமெரிக்கா தொடர்ந்து முன்னணி பாத்திரத்தை வகித்து வருவதாக கலாநிதி பிரதிபா மஹாநாம ஹேவா சுட்டிக் காட்டினார்.

எவ்வாறாயினும், ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இருந்து அமெரிக்கா வெளியேறுவது புவிசார் அரசியல் நிலப்பரப்பை இலங்கைக்கு சாதகமாக மாற்றும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதன் மூலம், எங்களின் சொந்த மனித உரிமைகள் திட்டத்தை முன்வைக்க எங்களுக்கு ஒரு குறிப்பிடத்தக்க வாய்ப்புக் கிடைத்துள்ளது.

உள்நாட்டில் உருவாக்கப்பட்ட கட்டமைப்பானது, எங்கள் கதை மற்றும் எதிர்கால கொள்கைகளுக்கு பொறுப்பேற்க அனுமதிக்கும்.

இந்தியா, தென்னாபிரிக்கா மற்றும் ஜப்பான் போன்ற முக்கிய நாடுகளின் ஆதரவைப் பெற்றால், இலங்கை அரசிற்கு எதிரான முந்தைய தீர்மானத்தை நாம் திறம்பட எதிர்கொள்ள முடியும் என்றும் அவர் தெரிவித்தார். (நி-8)

## சபாநாயகரைச் சந்தித்தார்

# சுவிஸ் தூதுவர்



(கொழும்பு)

இலங்கைக்கான சுவிஸ் தூதுவர் சிரி வோல்ட் சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்னவை கடந்த வெள்ளிக்கிழமை பாராளுமன்ற வளாகத்தில் சந்தித்தார்.

சுவிஸ் அரசாங்கம் பல்வேறு துறைகளில் இலங்கைக்கு வழங்கும் ஆதரவுகளுக்கு சபாநாயகர் இதன்போது நன்றி தெரிவித்தார்.

பொருளாதார அபிவிருத்தி, ஊழல் ஒழிப்பு முயற்சிகள், நல்லிணக்கம் மற்றும் பாராளுமன்ற ஒத்துழைப்புக்களை அதிகரித்தல் உள்ளிட்ட பிரதான துறைகளில் இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவது தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டன.

இரு நாடுகளுக்கும் இடையிலான தொடர்ச்சியான ஒத்துழைப்பின் முக்கியத்துவத்தை சுட்டிக்காட்டிய சுவிஸ் தூதுவர், எதிர்காலத்திலும் இலங்கைக்கு ஆதரவளிப்பதற்கான உறுதிப்பாட்டை மீண்டும் வலியுறுத்தினார். (நி-8)




ஆயுள் காப்புறுதித் துறையில் மிகப் பெரிய மற்றும் வலிமையான காப்புறுதி நிறுவனமான ஸ்ரீலங்கா இன்ஷூரன்ஸ் லைஃப் (SLIC Life) சமீபத்தில் கொழும்பில் உள்ள ஷங்கரில்லா ஹோட்டலில் நட்சத்திர விருதுகள் 2024 இல் நடத்தியது.

2023 ஆம் ஆண்டு முழுவதும் சிறப்பான அர்ப்பணிப்பு, விடாமுயற்சி மற்றும் தொடர் வெற்றி என விளங்கும் சிறந்த விற்பனை சாதனையாளர்களுக்கான கௌரவிப்பும் இடம்பெற்றது.

பிராந்திய முகாமையாளர் பா.சத்தியன் (வடபிராந்தியம்), அகில இலங்கை ரீதியில் சிறந்த கிளை முகாமையாளர் அ.சுபேசன் (யாழ்ப்பாணக் கிளை), சிறந்த குழுத்தலைவர் ந.நர்த்தனன் (சாவகச்சேரிக்கிளை), சிறந்த அணித்தலைவர் அமில பிரசாத் (கிரிபத்கொட), சிறந்த புதிய வியாபாரத்தை அறிமுகப்படுத்திவர் நா.நாகராஜா (யாழ்ப்பாணக் கிளை), சிறந்த ஆலோசகர் எஸ்.எம்.எம்.ஜி.சுபசிங்க பண்டா (நுகேகொட) மற்றும் சிறந்த வங்கிக் காப்புறுதி விற்பனை அதிகாரி (ஆலோசகர் பிரிவு) செல்வி ஏ.எல்.டி.எம்.லியனகே ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர்.



இலங்கை முதல் உதவிச் சங்க இந்து சமயத் தொண்டர் சபை இலங்கையில் நிரந்தர அமைதி, சாந்தி, சமாதானம், நல்லிணக்கம், இனங்களுக்கு இடையேயான பேதங்கள் நீங்கி ஒற்றுமை வளர இறையருள் வேண்டி நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்திலிருந்து காலிச் சிவன் ஆலயம் வரை முன்னெடுக்கும் புனித திருத்தலத் தரிசன யாத்திரை நேற்று வெள்ளிக்கிழமை காலை நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்திலிருந்து ஆரம்பமானது.

படம் - சிவசாந்தன்

# சடுதியாக அதிகரித்த இளநீர் விலை



(கொழும்பு)

தற்போது பல பகுதிகளில் இளநீருக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன் காரணமாக குறித்த பகுதிகளில் இளநீர் ஒன்றின் விலை இருநூறு முதல் இருநூற்று ஐம்பது ரூபாய் வரை அதிகரித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

போதுமான அளவு கையிருப்பிற்கு கிடைக்காததால் சில்லறை விற்பனையை கூட கைவிட்டு விட்டதாக இளநீர் விற்பனையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, பல்வேறு நோய்களுக்கு இளநீர் குடிக்குமாறு பரிந்துரைக்கப்பட்ட நோயாளிகள், தங்களுக்குத் தேவையான இளநீரை கொள்வனவு செய்வதற்கும் சிரமம் ஏற்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளனர்

அதிக அளவிலான இளநீர் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதால் இந்த தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும் வறண்ட காலநிலை அதிகரித்தால் இளநீர் ஒன்றின் விலை முந்நூறு ரூபாய் வரை உயரக் கூடும் என்றும் சில்லறை விற்பனையாளர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்
## உழவு இயந்திரம் விற்பனைக்கான விலைமனுக் கோரல்-2025

எமது சபையின் பாவனையிலிருந்து நீக்கப்பட்ட உழவு இயந்திரத்தினை விற்பனை செய்வதற்கான விலை மனுக்கள் சபையினால் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி : 10.02.2025 - 24.02.2025 நண்பகல் 12.00 மணி வரை
விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி : 24.02.2025 பி.ப 02.00 மணி வரை
விலை மனுக்கள் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி : 24.02.2025 திங்கட்கிழமை பி.ப 02.00 மணி
விலை மனுப்பத்திரம் திறக்கப்படும் இடம் : தலைமை அலுவலகம்
வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்.

விலைமனுக்கள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு இரு கடித உறையில் தனித்தனியாக இட்டு இடது பக்க மேல் மூலையில் **"உழவு இயந்திரத்திற்கான விலைமனுக்கோரல் - 2025"** எனத் தெளிவாகக் குறிப்பிட்டு மூலப்பிரதியையும் இணைப்பிரதியையும் **"தலைவர், உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு, வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, தலைமை அலுவலகம், புத்தூர்"** என்னும் முகவரிக்கு எதிர்வரும் **24.02.2025** ஆம் திகதி திங்கட்கிழமை பி.ப **02.00** மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும். குறித்த தினத்திற்கு பின்னர் கிடைக்கும் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது மேலும் விலைமனுக்களை காரணங்கள் காட்டாது ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு பூரண அதிகாரம் உண்டு.

விற்பனைக்கான உழவு இயந்திரத்தினை எமது தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பார்வையிட முடியும்.

| இல | விபரம் | மீளளிக்கப்படாத விலைமனுப் படிவக் கட்டணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த கேள்வித்தொகை |
|---|---|---|---|---|
| 1. | உழவு இயந்திரம் | 1,000.00 | 5,000.00 | 170,000.00 |

1. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் தங்களது தேசிய அடையாள அட்டையுடன் அதன் நிழற்படப்பிரதியையும் பிரதேச கிராம சேவையாளரினால் வழங்கப்பட்ட வதிவிடச் சான்றிதழ் அல்லது வங்கிக்கணக்கு புத்தகப்பிரதியையும் சமர்ப்பித்து உரிய கட்டணங்களை பணமாகச் செலுத்தி விலைமனுப் பத்திரங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.
2. உள்ளூராட்சி மன்றங்களினால் "தவறுனராக" கணிக்கப்பட்ட எவருக்கும் விலைமனுப்பத்திரம் வழங்கப்படமாட்டாது. எனினும் படிவம் வழங்கப்பட்டபின் அறியும் பட்சத்தில் அவரின் விலைமனு நிராகரிக்கப்படும்.
3. ஆகக்குறைந்த விலைமனுத் தொகையிலும் குறைந்த விலைமனு கோருபவர்களின் விலைமனு விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதுடன் விலைமனு வைப்புப்பணமும் மீளளிக்கப்படமாட்டாது.
4. விலைமனு திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரரோ அல்லது அவரது ஒரு பிரதிநிதியோ சமூகமளிக்கலாம்.
5. விலைமனுவில் வெற்றிபெறும் விலைமனுதாரர் பணமாக ஒரே தடவையில் உரிய தொகையினை உடனடியாகச் செலுத்துவதுடன் 07 நாட்களுக்குள் உழவு இயந்திரத்தினை அலுவலகத்திலிருந்து அகற்றுதல் வேண்டும்.

மேலதிக விபரங்களிற்கு- 021 205 8865, 021 202 8867

**தலைவர்,**
**உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு,**
**வலிகாமம் கிழக்கு பிரதேச சபை,**
**புத்தூர்.**

2025.02.08 (சி-2217)

# ரஷ்ய இராணுவத்தில் இணைந்த இலங்கையர்களில் 59 பேர் பலி

## உறுதிப்படுத்திய அமைச்சர் விஜிதஹேரத்



(கொழும்பு)

ரஷ்ய இராணுவத்தில் இணைந்து கொண்ட 59 இலங்கையர்கள் ரஷ்யா - உக்ரைன் போரில் உயிரிழந்துள்ளதாக அமைச்சர் விஜித ஹேரத் நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

ரஷ்ய இராணுவத்தில் 554 இலங்கையர்கள் இணைந்துள்ளதாகவும், அவர்களில் யாரும் வலுக்கட்டாயமாக ஆட்சேர்ப்பு செய்யப்படவில்லை என்றும் தெரிய வந்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

இந்த நாட்டிலுள்ள அவர்களின் உறவினர்களுடன் தொடர்பைப் பேணுவதற்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்தி கொடுக்குமாறு ரஷ்யாவில் உள்ள இலங்கைத் தூதரகத்திற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக விஜித ஹேரத் மேலும் தெரிவித்தார். (நி-8)

# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையில் கடமையாற்றும் ஆசிரியர் திருமதி. ராகினி சுகேந்திரன் அவர்களின் அன்பு மாமியார்

அமரர்.திருமதி.
**நாகேஸ்வரி காசிநாதன்**



அவர்கள் 07.02.2025 வெள்ளிக்கிழமை அன்று காலமானார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். (3356)

ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா/கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டித வித்தியாசாலை.

# இராசிபலன்

08.02.2025
தை 26 சனிக்கிழமை
ஏகாதசி முன்னிரவு 10.04 மணிவரை

மிருகசீரிடம் முன்னிரவு 7.52 மணிவரை
சுபநேரம் 3.35-5.05 மணிவரை
இராகுகாலம் 9.35-11.05 மணிவரை

பீம ஏகாதசி விரதம்
சந்திராஷ்டமம் - விசாகம், அனுசம்

**வள்ளவன்**

**மேஷம்** - குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், சவால்களைச் சமார்த்தியமாகச் சமாளிப்பீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**ரிஷபம்** - பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும், வழிபாட்டில் ஆர்வம் கூடும், வியாபார விருத்தியுண்டு, வருமானம் அதிகரிக்கும் நாள், வாக்கு மேன்மையுண்டு.

**மிதுனம்** - ஒரு வகையில் சிக்கனமாக இருந்தாலும் மற்றொரு வகையில் விரயம் ஏற்படலாம், மகிழ்ச்சி அதிகரித்து மனமாற்றம் காணும் நாள்.

**கடகம்** - தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள், தேவையற்ற வார்த்தைகளைத் தவிர்ப்பது நல்லது.

**சிம்மம்** - வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், காரிய அனுகூலமுண்டு.

**கன்னி** - காலைப்பொழுதே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், புதிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, செயற்பாடுகளில் உற்சாகம் காட்டுவீர்கள், புதிய திட்டங்களில் முன்னேற்றம் காணும் நாள்.

**துலாம்** - தொழில் ரீதியாக சிலர் உங்களிடம் உதவி கேட்டு வரலாம், தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், பயணங்களால் பலனுண்டு.

**விருச்சிகம்** - கடவுளைக் கும்பிட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், பொறுமையால் பெருமை காண வேண்டிய நாள், எடுத்த காரியங்களை நிறைவேற்றுவதில் அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள்.

**தனுசு** - ஏட்டிக்குப் போட்டியாகச் செயற்பட்டவர்கள் மனம் மாறுவர், புதிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, பால்ய நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பயணங்களால் பலனுண்டு.

**மகரம்** - கனிவாகப் பேசி காரியங்களை சாதித்துக் கொள்வீர்கள், சேமிப்பை அதிகரிக்கும் எண்ணம் உருவாகும், செய்தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், வருமானம் திருப்தி தரும்.

**கும்பம்** - பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, பிள்ளைகளின் நலனில் அக்கறை கூடும், தாழ்ந்த சுபாவமுண்டு, சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள்.

**மீனம்** - அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், புதிய நபர்களின் சந்திப்புக்கள் இடம்பெறலாம், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், தொலைபேசித் தகவல் மகிழ்ச்சி தரும்.

**ஒருவனை அவனது நண்பனைக் கொண்டு அறியலாம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிக ஒலி எழுப்பினால் சட்டம் பாயும்!

## அரசாங்க அதிபர் பிரதீபன்



(யாழ்ப்பாணம்)

**அதிக ஒலி எழுப்பி இடையூறு செய்வோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் ம.பிரதீபன் தெரிவித்துள்ளார்.**

சுற்றாடல் பாதுகாப்புக் குழு கூட்டம் நேற்று யாழ். மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

இதன்போது யாழ்ப்பாணம் மாவட்டத்தில் திண்மக் கழிவு அகற்றல், வளி மாசடைதல், பொது மக்களுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்தும் ஒலிபெருக்கிகளை கட்டுப்படுத்தல் போன்ற விடயங்கள் குறித்து தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

இதுதொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், குறிப்பாக ஆலயங்கள் மற்றும் வேறு நிகழ்வுகளில் பயன்படுத்தப்படும் ஒலிபெருக்கிகளால் அசௌகரியங்கள் ஏற்படுவதாக எமக்கு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

குறிப்பாக இரவு வேளைகளில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு இந்த ஒலிபெருக்கி மூலம் இடையூறு ஏற்படுவதை நாங்கள் அறிந்திருக்கின்றோம். ஆகவே இதற்கு எதிராக நாங்கள் சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளோம்.

எத்தனை டெசிமல் அளவில் ஒலிபெருக்கியை பயன்படுத்த வேண்டும் என்ற வரையறை உள்ளது. ஆகவே இதனைக் கட்டுப்படுத்தக் கூடிய வல்லமை பொலிஸாருக்கு உள்ளது. இது குறித்து எழுத்து மூலம் பொலிஸாருக்கும் அறிவித்துள்ளோம்.

இவ்வாறு அசௌகரியங்கள் ஏற்படும் பட்சத்தில் பொதுமக்கள் உங்களுடைய முறைப்பாடுகளை பிரதேச செயலகங்களுக்கு தெரிவிப்பதன் மூலம், பிரதேச செயலர்கள் அதனை உடனடியாக பொலிஸாரின் கவனத்துக்கு கொண்டுவந்து அந்த ஒலியின் அளவைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்வார்கள்.

எனவே ஆலயங்களில் சமய நிகழ்வுகளின்போது ஒலிபெருக்கிகளை பயன்படுத்தும் போது அயலில் உள்ளவர்கள் மாணவர்கள் மற்றும் வயோதிபர்களுக்கு இடையூறு ஏற்படாத வண்ணம் ஒலிபெருக்கிகளை பயன்படுத்துமாறு அரச அதிபர் தெரிவித்துள்ளார். (6-8-33)



வட்டு இந்துக் கல்லூரியிலிருந்து தேசிய ரீதியில் இளம் விவசாய விஞ்ஞானி போட்டியில் தங்கப் பதக்கம் பெற்ற மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு கடந்த புதன் கிழமை கல்லூரியின் சோமசுந்தரப் புலவர் அரங்கில் வட்டு இந்துவின் முதல்வர் லங்கா பிரதீபன் தலைமையில் நடைபெற்றது. (படம்: சிவசாந்தன்)

## புங்குடுதீவு மத்திய கல்லூரியில் வலைப்பந்தாட்ட பயிற்சி முகாம்

(சாவகச்சேரி)

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் வலைப்பந்தாட்ட விளையாட்டினை மேம்படுத்தும் நோக்கில் யாழ் மாவட்ட வலைப்பந்தாட்ட சங்கத்தினரால் இன்று சனிக்கிழமை புங்குடுதீவு மத்திய கல்லூரி மைதானத்தில் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.30 மணி வரை யாழ் மாவட்டத்தின் முன்னணி பயிற்சியாளர்களினால் வலைப்பந்தாட்ட பயிற்சி முகாம் முன்னெடுக்கப்படவுள்ளது.

அத்தோடு எதிர்வரும் மார்ச் மாதம் மகளிர் தினத்தினை முன்னிட்டு நடத்தப்படவுள்ள 16 வயதுக்கு உட்பட்டவர்களுக்கான வலைப்பந்தாட்ட போட்டித் தொடருக்கான தெரிவும் அன்றைய தினம் இடம்பெறவுள்ளமையால் புங்குடுதீவு பிரதேசத்தினைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களையும் இப் பயிற்சி முகாமில் கலந்துகொள்ளுமாறும் ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர் .

இந் நிகழ்வுக்கான நிதி அனுசரணையினைப் புங்குடுதீவு உலக மையம் தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின் ஒருங்கிணைப்பாளர்கள் வழங்குகின்றமை குறிப்பிடத்தக்கது. (6-8-30)

## யோகா பயிற்சிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் அறிவுத் திருக் கோவிலில் இந்த வாரத்திற்கான எளியமுறை யோகா பயிற்சிகள் அறிமுகவுரையுடன் இன்று மாலை 5 மணிக்கு இல.81 பிறவுண் வீதி யாழ்ப்பாணத்திலுள்ள அறிவுத் திருக்கோவிலில் ஆரம்பமாகவுள்ளது.

சனிக்கிழமை முதல் வெள்ளிக்கிழமை வரை மாலை 5 மணி தொடக்கம் 7 மணி வரை எளியமுறை உடற் பயிற்சிகள், எளியமுறை குண்டலினி தியானப் பயிற்சிகள், சித்தர்களின் காயகல்பப் பயிற்சிகள் வழங்கப்படும்.

பயிற்சிகளைத் தமிழ்நாட்டில் இருந்து வருகை தந்துள்ள மனவளக் கலை முதுநிலை பேராசிரியர் கே.ஆர்.முனிரத்தினம் வழங்கவுள்ளார். இப் பயிற்சிகளை பெற விரும்புவோர் 076 857 1395 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளார். (6-8)

## பனங்கிழங்கு அல்வா அறிமுகம்

(சாவகச்சேரி)

பனை அபிவிருத்திச்சபையினரால் அண்மையில் புதிய உற்பத்தியாக பனங்கிழங்கு அல்வா தயாரிக்கப்பட்டு அறிமுகம் செய்து வைக்கப்பட்டது.

பனை அபிவிருத்திச்சபையின் காரைநகர் உற்பத்தி நிலையத்தின் பொறுப்பாளர் சுதாகரனின் தயாரிப்பில் உருவாக்கப்பட்ட, பனங்கிழங்கு அல்வா, சபைத் தலைவர் வி.சகாதேவன் மற்றும் பணியாளர்களுக்கு வழங்கப்பட்டு அறிமுகம் செய்து வைக்கப் பட்டது.

இதன்போது பனை அபிவிருத்திச்சபைத் தலைவர் சகாதேவன் கருத்துத் தெரிவிக்கையில், பனை ஊடாக ஆயிரக் கணக்கான உற்பத்திகளை மேற்கொள்ள முடியும்.

புதிய புதிய பனை சார் உற்பத்திகளை உற்பத்தியாளர்கள் முன்னெடுக்கும் விதமாக எமது சபையின் செயற்பாடுகள் அமையும் என மேலும் அவர் தெரிவித்திருந்தார். (6-8-[illegible])

## விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபை மகளிர் விவகார அமைச்சினால் 2025 ஆம் ஆண்டு மார்ச் மாதம் கொண்டாடப்படவுள்ள சர்வதேச மகளிர் தினத்தில் பெண் சாதனையாளர்களை கௌரவிக்கும் முகமாக வடக்கு மாகாணத்தில் நிரந்தர வதிவிடத்தைக் கொண்ட பல் வேறுபட்ட துறைசார் பெண் சாதனையாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரிகளிடமிருந்து மேற்படித் தெரிவு அடிப்படையில் சாதனையாளர்கள் தெரிவு செய்யப்படுவர்.

திறந்த போட்டிகளாக நடைபெறும் இப் போட்டிகளில் பங்குபற்ற ஆர்வமுள்ளவர்கள் மகளிர் விவகார அமைச்சு, வ.மா, இல. 04, பருதி லேன், புங்கன் குளம் சந்தி, அரியாலை, கண்டி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரி ஊடாகவோ அல்லது அமைச்சின் மின் அஞ்சல் npminwa@gmail.com மற்றும் தொலைபேசி இல 022 1122 0884 ஊடாகவோ தொடர்பு கொண்டு போட்டி நுழைவுக்கான விண்ணப்பம் மற்றும் விதிமுறைகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.

மேலதிக விபரங்களுக்கு https://np.gov.lk எனும் வடக்கு மாகாண சபையின் இணையத்தளத்தினை பார்வையிட முடியும் என அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார். (6-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பலப்படுத்தப்படும் பாராளுமன்றின் பாதுகாப்பு

(கொழும்பு)

எதிர்வரும் 17 ஆம் திகதி திங்கட்கிழமை அன்று வரவு - செலவுத்திட்டம் தாக்கல் செய்யப்படுவதற்கு கடுமையான பாதுகாப்பு ஏற்பாடுகள் பாராளுமன்றத்தில் இருக்கும் என்று பிரதி சபாநாயகர் ரிஸ்வி சாலிஹ் நேற்று அறிவித்துள்ளார்.

அதன்படி, பொது வாகன நிறுத்துமிடம் மூடப்படும் அதே நேரத்தில் எம்.பி க்கள் தங்கள் வாழ்க்கைத் துணைவர்களை மட்டுமே அழைத்து வருமாறும் வேறு எந்த விருந்தினர்களையும் அழைத்து வரக்கூடாது என்றும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். இந்நிலையில், அழைக்கப்பட்ட விருந்தினர்களுக்கு மட்டுமே பாராளுமன்ற காட்சியகம் திறந்திருக்கும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (நி-8)

# தேடப்பட்ட சந்தேக நபர்கள் கைது

(கொழும்பு)

நாட்டில் இடம்பெற்ற பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடையதாகத் தேடப்பட்டு வந்த மூன்று சந்தேக நபர்கள் நாட்டிற்கு நேற்று அழைத்து வரப்பட்டுள்ளனர்.

டுபாயில் கைது செய்யப்பட்ட மூன்று சந்தேக நபர்களையும் குற்றப் புலனாய்வுத்திணைக்கள அதிகாரிகள் குழுவொன்று இந்நாட்டுக்கு அழைத்து வந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இலங்கை பொலிஸாரின் அறிவிப்பின் அடிப்படையில், இன்டர்போல் அந்த சந்தேக நபர்களுக்கு சிவப்பு அறிவிப்பும் பிறப்பித்திருந்தது.

இதேவேளை மூன்று சந்தேக நபர்களும் நேற்று UL-226 விமானத்தில் கட்டுநாயக்கவில் உள்ள பண்டார நாயக்க சர்வதேச விமான நிலையத்திற்கு கொண்டு வரப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

# காற்று மாசு: முகக் கவசம் அணியுமாறு அறிவுறுத்து

(கொழும்பு)

நாட்டில் அண்மைய நாட்களாக காற்றின் தரம் ஆரோக்கியமற்ற நிலையில் இருப்பதால் முகக் கவசம் அணியுமாறு பொது மக்களுக்கு தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தின் சுற்றாடல் கற்கைகள் மற்றும் சேவைகள் பிரிவு அறிவுறுத்தல் விடுத்துள்ளது.

அதன்படி நாட்டில் இன்று பெரும்பாலான நகரங்களில் காற்றின் தரம் மிதமான நிலையிலும், கண்டி, காலி, இரத்தினபுரி, எம்பிலிப்பிட்டிய, புத்தளம், பதுளை, திருகோணமலை, பொலநறுவை மற்றும் அநுராதபுரத்தில் சிறிது ஆரோக்கியமற்ற நிலையில் காணப்படுகிறது.

மேலும் காற்றின் தரக் குறியீடு 68 மற்றும் 114 இற்கு இடையில் பதிவாகியுள்ளதாக குறிப்பிட்டுள்ளது. (நி-8)


## வேலைவாய்ப்பு

No.198 கஸ்தூரியார் வீதியிலுள்ள SB TRAVELS AND TOURS PVT LTD அலுவலகத்திற்கு Air Ticketing அனுபவமுள்ளவர்கள் விரும்பத்தக்கது. அனுபவமற்றவர்களுக்கு Training கொடுக்கப்படும். (C-2214)

தொடர்புகளுக்கு:- 021 222 8555, 077 108 3482


## பொது அறிவித்தல்
## வலிகாமம் வடக்கு பிரதேச சபை
## காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி)

**கீரிமலை நகுலேஸ்வரா ஆலய உற்சவகால தினங்களுக்கானதும், சிவராத்திரி தினத்திற்கானதுமான தற்காலிக வியாபார நிலையங்கள் அமைப்பதற்கான இடங்களை ஏலத்தில் வழங்கல்**

கீரிமலை நகுலேஸ்வரா ஆலய உற்சவகால, சிவராத்திரி தினத்திற்கான தற்காலிக வியாபார நிலையங்கள் அமைப்பதற்கான இடங்களை பகிரங்க ஏலம் மூலம் குத்தகைக்கு வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஆர்வமுடையவர்கள் 11.02.2025 செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு கீரிமலை கேணியடி வாகனத்தரிப்பிடத்தில் ரூபா 200.00 கட்டணம் செலுத்தி விண்ணப்பப்படிவத்தைப் பெற்றுக்கொளள்லாம்.

**பகிரங்க ஏலம்**

உற்சவகாலத்திற்குரிய கடைகள் 1ஆம் கட்டமாக எதிர்வரும் 11.02.2025ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணிக்கும், 2ஆம் கட்டமாக தற்காலிக் கடைகள் எதிர்வரும் 24.02.2025ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு ஆலய முன்றலில் நடைபெறவுள்ளது. ஆர்வமுள்ளவர்கள் பங்குபற்றலாம்

குறிப்பு:

- சித்திபெற்ற கேள்விதாரர்கள் உடனடியாகவே அதற்கான குத்தகைப்பணம் முழுவதையும் செலுத்துவதுடன் வியாபார உரிமத்தினையும் பெற்றுக்கொள்ள வேண்டும்.
- ஆலய சுற்றாடலில் உள்ள நிரந்தரக் கடைகளும், உற்சவ காலத்துக்குப் பிரதேச சபையால் வழங்கப்படும் கடைகளும் தவிர வேறு கடைகள் தனியார் காணிகளிலோ அல்லது தனிப்பட்ட இடங்களிலோ சபையின் அனுமதியின்றி வியாபாரம் மேற்கொள்ள முடியாது.
- உணவு கையாளும் நிலையங்கள் மேலதிகமாக சுகாதார வைத்திய அதிகாரியினால் வழங்கப்படும் அனுமதியினைப் பெற்றுக்கொண்ட பின்னரே வியாபாரம் மேற்கொள்ள அனுமதிக்கப்படும். தவறும் பட்சத்தில் கேள்வியில் சித்தி பெற்றிருப்பினும் வியாபார நடவடிக்கைக்கு அனுமதி வழங்கப்படமாட்டாது.

**க.சுதர்ஜன், செயலாளர் ,**
**வலிகாமம் வடக்கு பிரதேச சபை,**
**காங்கேசன்துறை .** **08.02.2025**

(C-2216)


## கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>கிபா: 22 1/2<br>உயரம்: 5' 11"<br>தகைமை/தொழில்:MSc,Operation Analyst(London)<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி(London Only)<br>தொ.இ: B/15109 | பிறப்பு-1996-இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கிபா-25<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: Bcom,IT(PVT)<br>எதிர்பார்ப்பு: தகுதியான வரன்<br>தொ.இ: G/15110 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: விசாகம் 5 இல் சூரி செவ்<br>உயரம்:6'<br>தகைமை/தொழில்- A/L, மின் இணைப்பாளர்<br>எதிர்பார்ப்பு: படித்த தகுதியான பெண்<br>தொ.இ: B/15111 | பிறப்பு:1994 இந்து<br>நட்சத்திரம்:அவிட்டம்<br>கி.பா:52 7 இல் செவ்<br>உயரம்: 5' 4"<br>தகைமை/தொழில்:HR Management<br>எதிர்பார்ப்பு: படித்த வேலை பார்க்கும் ஆண்<br>தொ.இ: G/15113 |
| பிறப்பு:1994 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கிபா: 12 3/4<br>உயரம் : 6'<br>தகைமை/தொழில்: BSc,Civil Engineer(pvt)<br>எதிர்பார்ப்பு : BSC(IT)பட்டதாரி<br>தொ.இ: B/15112 | பிறப்பு: 1998 இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>உயரம்:5' 3"<br>தகைமை/தொழில்:HND IT, Accountant(pvt)<br>எதிர்பார்ப்பு:அரச தொழில்<br>தொ.இ: G/15116 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


## வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்
## ஆதனப் பெயர்மாற்றம்
### தெல்லிப்பளை வீதி, இல 469/2, வட்டாரம் -06

வலிகாமம் மேற்குபிரதேச சபை வட்டுக்கோட்டை உப அலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம் 06, தெல்லிப்பளை வீதியிலுள்ள இல: 469/2 ஆகிய ஆதனம் எமது ஆதன வரிப்பதிவேட்டின்பிரகாரம் **V.அம்பலவாணர் கணேஷ்** என்றே காணப்படுகிறது.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தினை உள்ளடக்கிய முழு ஆதனத்தினை **அம்பலவாணர் பரமகுருநாதன்** ஆகியவர் குறித்த ஆதனம் தனது பிதா காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை அம்பலவாணருக்கு சொந்தமாக இருந்து, அவரது சீவியகாலம் வரை அவரது ஆட்சியிலேயே இருந்து வந்தது எனவும், அவர் காலஞ்சென்றதும் அவரது ஏகபுத்திரனான தனக்கு முதுசமாக வந்தடைந்தது எனவும், குறித்த ஆதனம் தனதும், தனது தந்தையாரினதும் 81 வருட தங்கு தடையற்ற, சுயாதீன ஆட்சியிலும் இருந்ததன் பிரகாரம் ஆட்சியுரிமைச்சட்டத்தின் கால 310 பிரிவிற்கமைவாக ஆட்சியுரிமை மூலம் தான் உரித்தினைப் பெற்றுவிட்டதாகவும் வெளிப்படுத்தி பிரசித்த நொத்தாரிசு ஆ.குமாரசுவாமி முகதாவில் 6138/10.02.2000 ஆம் இலக்கத்தில் வெளிப்படுத்தல் உறுதியொன்றை நிறைவேற்றியிருந்தார். குறித்த உறுதியில் அடி உறுதி பற்றிய விபரங்கள் எதுவும் குறிப்பிடப்படாது குறித்த உறுதியானது நிறைவேற்றப்பட்டுள்ளது.

**நாகலிங்கம் சபாபதிநாதன்** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு ஆ.குமாரசுவாமி முகதாவில் நிறைவேற்றப்பட்ட 6139/10.02.2000 ஆம் இலக்க உறுதியால் குறித்த **அம்பலவாணர் பரமகுருநாதன்** ஆகியவரிடமிருந்து மேற்படி ஆதனத்தின் ஒரு பகுதியினை நன்கொடையாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

**கார்த்திகேசு வரதராசாவும் பெண் கலாவதியும்** ஆகியவர்கள் பிரசித்த நொத்தாரிசு வே.த.மு கதிர்காமநாதன் முகதாவில் 3594/28.02.2001 ஆம் இலக்க உறுதியால் குறித்த நாகலிங்கம் **சபாபதிநாதனும், அம்பலவாணர் பரமகுருநாதனும்** ஆகியவர்களிடமிருந்து மேற்படி ஆதனத்தினை அறுதியாக பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்கள்.

குறித்த **கார்த்திகேசு வரதராசாவும் பெண் கலாவதியும் ஆகியவர்கள்** ஆதனப்பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்கள்.

இவ் ஆதனத்தின் பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பர்கள் யாராவது இருப்பின் **உரிய ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும்** அவ்வாறு உரிமை கோராத விடத்து குறித்த ஆதனமானது **கார்த்திகேசு வரதராசாவும் பெண் கலாவதியும்** ஆகியவர்களுக்கு பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனத்தின் பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் மேற்கு பிரதேசசபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**செயலாளர்,**
**வலிகாமம் மேற்குபிரதேசசபை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதம்

# பயணிகளுடன் காணாமல்போன அமெரிக்க விமானம்



(வோஷிங்டன்)
அமெரிக்க மாநிலமான அலஸ்காவிற்கு சொந்தமான விமானமொன்று 10 பயணிகளுடன் காணாமல் போயுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

உனலக்லீட்டில் இருந்து நோம் நோக்கிப் பயணித்த விமானம் ஒன்றே இவ்வாறு காணாமல் போயுள்ளது.

இந்த விமானத்தில் விமானி ஒருவரும் 9 பயணிகளும் பயணித்ததாக விமான நிறுவனம் வெளியிட்டுள்ள அறிவிப்பில் தெரிய வருகிறது.

விமானம் உள்ளூர் நேரப்படி நேற்று பிற்பகல் 2.37 மணிக்கு உனலக்லீட்டில் இருந்து புறப்பட்டு, கடைசியாக நார்டன் சவுண்ட் பகுதிக்கு மேல் பிற்பகல் 3.16 மணிக்கு தரவை அனுப்பியதாக விமானப் பதிவுகள் குறிப்பிடுகின்றன.

முன்னதாக வோஷிங்டனில் ஒரு இராணுவ விமானமும் ஒரு ஜெட் விமானமும் நடுவானில் மோதியதில் 67 பேர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

# சர்வதேச குற்றவிய... தடை விதித்த டெ...

(வோஷிங்டன்)
சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் மீது த... நிர்வாக உத்தரவில் அமெரிக்க ஜனாதிபதி டொ... கையெழுத்திட்டார் என வெள்ளை மாளிகை அதி... அறிவித்துள்ளது.

கடந்த மாதம் அமெரிக்க ஜனாதிபதியாக இரண்டாவது முறையாகப் பதவியேற்றதில் இருந்து ட்ரம்ப் பல்வேறு நடவடிக்கைகளை தொடர்ச்சியாக எடுத்து வருகிறார். அந்த வரிசையில் தான் தற்போது சர்வதேச நீதிமன்றத்திற்கு தடை விதிக்க அவர் உத்தரவிட்டுள்ளார். அமெரிக்கா மற்றும் அதன் நட்பு நாடான இஸ்ரேலை குறிவைத்து தொடர் விசாரணைகளை நடத்திவருவதாக அமெரிக்கா குற்றம்சாட்டியுள்ளது.

மேலும், இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவிற்கு கைது உத்தரவு பிறப்பித்து இருப்பதன் மூலம் தனது அதிகாரத்தை நீதிமன்றம் துஷ்பிரயோகம் செய்துள்ளதாகத் தெரிவித்துள்ளது.

முன்னதாக பெஞ்சமின் நெதன்யாகு அமெரிக்காவில் வைத்து ஜனாதிபதி ட்ரம்பை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியிருந்தார்.

அமெரிக்காவின் புதிய உத்தரவு காரணமாக சர்வதேச குற்றவியல் நீதிமன்ற அதிகாரிகள், ஊழியர்

# போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறி லெபனானைத் தாக்கிய இஸ்ரேல்!

(ஜெருசலேம்)
ஹிஸ்புல்லாவுக்கு சொந்தமான லெபனானின் இரண்டு ஆயுதக் கிடங்குகளில் தாக்குதல் நடத்தியதாக இஸ்ரேல் தெரிவித்துள்ளது. போர் நிறுத்த ஒப்பந்தம் அமுலில் உள்ள நிலையில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டு உள்ளது.



லெபனான் எல்லைக்கு உட்பட்ட இரண்டு ஆயுதக் கிடங்குகளில் ஹிஸ்புல்லாவுக்கு சொந்தமான ஆயுதங்கள் இருந்ததாகக் குற்றம் சாட்டிய இஸ்ரேல், அவற்றைத் துல்லியமாக தாக்கியதாக சமூக வலைத் தளங்களில் இஸ்ரேல் தெரிவித்துள்ளது.



இஸ்ரேல் மற்றும் ஹிஸ்புல்லா இடையிலான போர் நிறுத்த ஒப்பந்தம் அமுலில் உள்ளது. இந்த நிலையில் தான் இஸ்ரேல் லெபனான் மீது தாக்குதல் நடத்தியுள்ளது. இந்த விவகாரத்தில் இரு தரப்பும் மாறி மாறி குற்றச்சாட்டுகளை முன் வைத்து வருகின்றமை சுட்டிக்காட்டத்தக்கது. (நி-8)

# 'எலான் மஸ்கை செவ்... அமெரிக்காவில்...

(வோஷிங்டன்)
அமெரிக்காவில் ஜனாதிபதி ட்ரம்ப்புக்கு எதிராகவும் அவரது அரசில் முக்கிய பதவி வகிக்கும் தொழிலதிபர் எலான் மஸ்க்குக்கு எதிராகவும் போராட்டங்கள் வெடித்துள்ளன.

அமெரிக்க ஜனாதிபதியாகப் பதவியேற்றுள்ள ட்ரம்ப் வெளிநாடுகள் மீதான நடவடிக்கைகள் தவிர உள்நாட்டிலும் அதிரடியான சீர்திருத்தங்களை மேற்கொண்டு வருகிறார்.

பிராஜக்ட் 2025 என்ற தலைப்பில் கருத்தடை மருந்துகளில் இருந்து கல்வித்துறை வரை, நிதித்துறையிலிருந்து நீதித்துறை வரை இவர் அறிவித்துள்ள ஏராளமான நடவடிக்கைகள் அமெரிக்காவில் கடும் விமர்சனங்களுக்குள்ளாகியுள்ளன.


வெளிநாடுகள் மீது ட்ரம்ப் தொடங்கியுள்ள வணிகப்போர் உள்நாட்டில் விலைவாசி உயர்வுக்கு வழிவகுக்கும் என அஞ்சப்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ல் நீதிமன்றத்திற்கு டானால்ட் ட்ரம்ப்!

தடை விதிக்கும்
ானால்ட் ட்ரம்ப்
திகாரபூர்வமாக



கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்கள் மற்றும் நீதிமன்றத்தின் விசாரணைகளுக்கு உதவியதாகக் கருதப்படுவோருக்கு எதிராக சொத்து முடக்கம் மற்றும் பயணத் தடைகளை பிறப்பித்துள்ளது.

பெஞ்சமின் நெதன்யாகு அமெரிக்காவின் வெள்ளை மாளிகை வருகைக்குப் பிறகு இந்தத் தடை உத்தரவுகள் வெளியாகி உள்ளன. இவை வெளிப்படையாகவே அமெரிக்கா - இஸ்ரேல் இடையிலான நட்புறவை வெளிப்படுத்தும் வகையில் அமைந்துள்ளன.

முன்னதாக காசாவை கையகப்படுத்தி பாலஸ்தீனியர்களை மத்திய கிழக்கு நாடுகளுக்கு அனுப்பத் திட்டம் கொண்டிருப்பதாக ஜனாதிபதி ட்ரம்ப் அறிவித்து இருந்தார். அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் நீதிமன்றத்தின் உறுப்பினர்கள் அல்ல. இது குறித்து சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் தரப்பில் இது வரை எந்தக் கருத்தும் தெரிவிக்கப்படவில்லை. (நி-8)

# வாய் கிரகத்துக்கு அனுப்புங்கள்' ல் வெடித்த போராட்டம்!




படுகிறது.

இந்நிலையில் ட்ரம்ப்பையும் அவரது அரசில் செயல்திறன் மேம்பாட்டுத் துறையின் தலைவராக இருக்கும் தொழிலதிபர் எலான் மஸ்க்கையும் எதிர்த்து போராட்டங்கள் வெடித்துள்ளன.

ட்ரம்ப்பை தகுதி நீக்கம் செய்ய வேண்டும், எலான் மஸ்க்கை செவ்வாய் கிரகத்திற்கு அனுப்ப வேண்டும் என்ற பதாகைகளை போராட்டக்காரர்கள் ஏந்தியிருந்தனர்.

குறிப்பாக தொழிலதிபரான எலான் மஸ்க்கிற்கு அதிக அதிகாரம் அளித்து விருப்பம் போல் செயற்பட அனுமதித்துள்ளது குறித்தும் போராட்டக்காரர்கள் குரல் எழுப்பினர்.

லாஸ் ஏஞ்சலிஸ்,மின்னசோட்டா என 50 மாநிலங்களின் தலைநகரங்களில் ஒரே நாளில் நடைபெற்ற இப்போராட்டங்களில் நூற்றுக்கணக்கானோர் பங்கேற்றனர்.

ட்ரம்ப்பின் இரு பாலின கொள்கையை எதிர்த்தும் வேறு இடங்களில் போராட்டங்கள் இடம்பெற்றன. (நி-8)

# வைரலாகும் வடகொரியா வரைபடம்



(பியாங்யாங்)

வட கொரியா ஜனாதிபதி கிம் ஜாங் உன்னின் கொள்கை மாற்றத்தை பிரதிபலிக்கும் வகையில் வட கொரியா புதிய வரைபடத்தை வெளியிட்டுள்ளது. இது இணையத்தில் வைரலாகி வருகிறது.

கடந்த 1950 ஆம் ஆண்டுகளில் நடந்த கொரியப் போருக்கு பிறகு, கொரியர் தீபகற்பம், வடக்கு மற்றும் தெற்காகப் பிரிந்துவிட்டது.

கம்யூனிஸ்ட் ஆட்சி நடக்கும் வடகொரியாவும், அமெரிக்க அரசு ஆதரவு இருக்கும் தென் கொரியாவும் அவ்வப்போது இணைப்பு தொடர்பாக பேச்சு நடத்துவது வழக்கம்.

ஆனால் இந்த முயற்சிகளில் பெரிய முன்னேற்றம் எதுவும் இல்லை.

வட கொரியா கடந்த காலங்களில் வெளியிட்ட வரைபடம் அனைத்திலும், தென்கொரியாவை, அமெரிக்காவின் கைப்பாவையாக இருக்கும் கொரியா என்றே குறிப்பிட்டு வந்தது.

மேலும், வடகொரியாவுடன் தென்கொரியாவை இணைப்பதையும் லட்சியமாகக் கொண்டிருந்தது.

இந்த வரைபடத்தில், மற்ற நாடுகளைப் போலவே, தென்கொரியாவும் தனி நாடாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த வரைபடம் சீன சமூக ஊடக தளமான ரெட் நோட்டில் பகிரப்பட்டுள்ளது. நியூஸ்வீக் இதழ் வெளியிட்ட தகவலின் படி இந்த வரைபடம் ஏப்ரல் 2024 இல் பகிரப்பட்டுள்ளது.

தென் கொரியாவுடன் இணைப்பு முயற்சிகள் இனி சாத்தியமில்லை என்ற முடிவுக்கு வடகொரியா ஆட்சியாளர்கள் வந்துவிட்டதை காட்டுவதாக பலரும் கருத்து தெரிவிக்கின்றனர். (நி-8)

# சாண்டோரினி தீவில் நிலநடுக்கம் அவசர நிலை பிரகடனம்

(கிரீஸ்)

ஐரோப்பாவின் தென்கிழக்கே உள்ள கிரீஸ் நாட்டின் சாண்டோரினி தீவில் திடீரென நிலநடுக்கம் ஏற்பட்டது. கடந்த புதன்கிழமை இரவு ஏற்பட்ட இந்த நிலநடுக்கமானது ரிக்டர் அளவில் 5.2ஆக பதிவானது. நிலநடுக்கத்தால் இதுவரை பெரிய சேதம் எதுவும் பதிவாகவில்லை.

கடந்த ஒரு வாரத்திற்குள் 7,700 நிலநடுக்கங்கள் ஏற்பட்டுள்ளதாக கூறப்படும் நிலையில், இந்த நிலநடுக்கமே சக்திவாய்ந்த நிலநடுக்கமாகக் கருதப்படுகிறது.

நிலநடுக்கத்தால் கட்டடங்கள் அதிர்ந்த நிலையில், அவசர நிலை பிரகடனப் படுத்தப்பட்டது.

இந்த அவசர நிலையானது மார்ச் 3 ஆம் திகதி வரை அமுலில் இருக்கும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதைத் தொடர்ந்து சாண்டோரினி தீவிலிருந்து 11 ஆயிரம் பேர் வெளியேறி விட்டனர்.

சுமார் 7ஆயிரம் பேர் படகு மூலமாகவும், 4 ஆயிரம் பேர் விமானம் மூலமாகவும் புறப்பட்டனர். (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பலாலி ஓடுபாதை தொடர்பில் தன்னிச்சையான முடிவுகள் கூடாது

## அனைவரின் கருத்துக்களையும் செவிமடுக்க வேண்டும்

### கஜேந்திரகுமார் எம்.பி



(கொழும்பு)

பலாலி ஓடுபாதையை விரிவாக்குவதற்காக ஒருதலைப்பட்சமாக காணிகளை அபகரிக்கக் கூடாது என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் உரையாற்றிய அவர், ஓடுபாதையை விரிவு படுத்துவதற்காக பலாலியில் மேலும் நிலத்தை அரசாங்கம் அபகரிக்கப்போவதாக செய்தி வெளியாகி உள்ளது.

தற்போது பலாலி ஓடுபாதை 1,300 மீற்றராகவும் கட்டுநாயக்க விமான நிலையத்தில் 3,400 மீற்றராகவும் ரத்மலானை விமான ஓடுபாதை 1700 மீற்றராகவும் உள்ளது.

தற்போது உயர் பாதுகாப்பு வலயத்திலுள்ள பலாலி விமான நிலையத்திற்கான விமான ஓடுபாதையை மேலும் 2,400 மீற்றர் வரை நீடிக்க உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இது இரத்மலானை விமான ஓடுபாதையின் அளவை விட அதிகமானதாகும். அரசாங்கம் மேலும் காணிகளை அபகரிக்கும் நோக்கில் செயற்படுவதால் பலாலி பிரதேசத்தில் மீள்குடியேற்றுவதற்காக காத்திருக்கும் பலாலி மக்கள் பெரும் கொந்தளிப்பில் உள்ளனர்.

இந்த விடயங்கள் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டங்களில் கலந்துரையாடப்பட வேண்டும். யாழ்ப்பாண மாவட்ட தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் கலந்துரையாடி கருத்துக்களைக் கேட்டறிய வேண்டும். எங்களுக்கும் கருத்துகள் உள்ளன. நீங்கள் உண்மையில் மிகவும் திறமையான சர்வதேச விமான நிலையத்தை உருவாக்கப் போகிறீர்கள் என்றால் உண்மையில் யாழ்ப்பாணம் பொருத்தமற்ற இடமாகும். வன்னியில் அல்லது வவுனியாவில் அமைக்கலாம். அனுராதபுரத்தில் அமைக்கலாம், கிழக்கில் அமைக்கலாம்.

எனவே இவை விவாதிக்கப்பட வேண்டிய விடயங்கள் ஆகும். மேலும் அரசாங்கம் ஒருதலைப்பட்சமாக நடவடிக்கைகளை எடுக்கக் கூடாது என்பதையும் வலியுறுத்துகின்றேன் என அவர் தெரிவித்தார். (நி-8)



## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 800 | 700 | 700 | 800-900 | 900 |
| உருளைக்கிழங்கு | 180 | 200 | 170 | 150 | 200 |
| பச்சைமிளகாய் | 1200 | 1200 | 1000 | 900-950 | 1000 |
| தக்காளி | 200 | 250 | 200 | 150 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 250 | 200 | 200-220 | 200 |
| கோவா | 360 | 300 | 250 | 250 | 400 |
| கரட் | 450 | 550 | 600 | 350 | 600 |
| பூசணி | 120 | 140 | 150 | 100 | 200 |
| புடோல் | 250 | 250 | 200 | 200 | 400 |
| வாழைக்காய் | 200 | 140 | 160 | 100-150 | 300 |
| சின்ன வெங்காயம் | 350 | 350 | 500 | 250-400 | 400 |
| பெரிய வெங்காயம் | 250 | 250 | 180 | 150 | 200 |
| பாகற்காய் | 600 | 600 | 500 | 500-550 | 600 |
| வெண்டக்காய் | 350 | 400 | 300 | 250-300 | 600 |
| கருணைக் கிழங்கு | 180 | 160 | 150 | 100-120 | 300 |
| பயற்றங்காய் | 700 | 600 | 700 | 450-500 | 600 |
| லீக்ஸ் | 350 | 350 | 300 | 250-300 | 400 |
| பீற்றூட் | 300 | 300 | 400 | 250 | 400 |
| கறிமிளகாய் | 1200 | 1000 | 900 | 550-600 | 800 |
| முருங்கைக்காய் | -- | 3000 | 1500 | 1500 | 2400 |
| போஞ்சி | 400 | 400 | 400 | 350-400 | 600 |
| கத்தரிதம்புள்ள | 700 | 550 | 500 | 500 | 800 |
| கீரை - 1 பிடி | 120 | 120 | 80 | 50-70 | 100 |
| தேசிக்காய் | 250 | 300 | 250 | 150-200 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 220 | 240 | 200-250 | 150-230 | 200-260 |
| இராசவள்ளி | 600 | 400 | 500 | 400-500 | 800 |
| வெங்காயப்பூ | 180 | 120 | 230 | 100 | 200 |
| முள்ளங்கி | 100 | 120 | 100 | 100-120 | 200 |
| பொன்னாங்காணி | 120 | 80 | 130 | 100 | 80 |
| வல்லாரை | 60 | 70 | 50 | 50 | 100 |
| ஈரப்பலா | 100 | 140 | 100 | 100 | 150 |

# இன்று ஒரு தகவல் 318

தென்கச்சி.கோ.சுவாமிநாதன்



## உணவின் மகிமை

மகாபாரத யுத்தம் முடிந்தது. தருமர் சக்கரவர்த்தியானார். பீஷ்மர் யுத்த பூமியிலே அம்புப் படுக்கையிலே படுத்துக்கொண்டிருந்தார். உயிரை விடப் போகிறார். சூரியன் வடதிசையை அடையும் உத்தராயன புண்ணிய காலத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார். அந்தச் சமயத்திலே தர்மர் கண்ணனிடம் அனுமதி வாங்கிக்கொண்டு பீஷ்மரைப் பார்ப்பதற்காக குருஷேத்திரத்துக்கு வருகிறார். தம்பிமார்கள் திரௌபதி எல்லாரும் கூட வருகிறார்கள். பீஷ்மரைப் பார்த்து எல்லோரும் வணங்குகிறார்கள்.

யுதிஷ்டிரர் பீஷ்மரிடம் வர்ணம், ஆசிரமம், மக்கள் கடமை, அரசரின் கடமை, இது மாதிரி விடயங்களைப் பற்றி நிறையக் கேள்விகளைக் கேட்டார். அவர் ஒவ்வொன்றாகப் பதில் சொன்னார். இப்படி பீஷ்மர் யுதிஷ்டிரருக்கு தர்மோபதேசம் செய்யும் போது திரௌபதிக்குச் சிரிப்பு வந்தது சிரித்துவிட்டார். அந்தச் சத்தத்தைக் கேட்ட பீஷ்மர் திரௌபதியைப் பார்த்து மகளே! ஏன் சிரித்தாய் என்று கேட்டார். என்னை மன்னித்துவிடுங்கள் பிதாமகரே ஏதோ தெரியாமல் சிரித்துவிட்டேன் என்றார் அவர். குழந்தாய்! உன்னை மாதிரியுள்ள உத்தமப் பெண்கள் காரணமில்லாமல் பலர் முன்னிலையிலே இப்படிச் சிரிக்கமாட்டார்கள் வெட்கப்படாமல் விடயத்தை சொல்லுங்கள் என்றார் அவர். திரௌபதிக்கு கண் கலங்க ஆரம்பித்து விட்டது. சுவாமி இப்போது தர்மோபதேசம் செய்துகொண்டிருக்கிறீர்கள். இதைப் பார்க்கும் போது எனக்கு திடீரென்று ஒரு சந்தேகம் வந்தது. அதாவது இன்றைக்குத் தர்மத்துக்கு இவ்வளவு சிறந்த விளக்கத்தைக் கொடுக்கிற இதே பிதாமகர் அன்றைக்கு கௌரவர் சபையிலே துச்சாதனன் என்னை மானபங்கப்படுத்த முயற்சி செய்தபோது வாய்முடி மௌனமாகப் பார்த்துக்கொண்டு சும்மா தானே இருந்தார்! அந்தச் சமயத்திலே இவ்வளவு ஞானத்தையும் எங்கே விட்டு வைத்திருந்தார்? ஒருவேளை அதற்கு அப்புறம்தான் இந்த தர்ம விடயங்களையெல்லாம் கற்றுக்கொண்டாரா? என்று யோசித்தேன் அதுதான் சிரிப்பு வந்துவிட்டது. என்னை மன்னித்துவிடுங்கள் என்றார்.

பிதாமகர் இதற்கு அமைதியாகப் பதில் சொல்ல ஆரம்பித்தார். குழந்தாய்! உன்னுடைய கேள்வி நியாயமானதுதான். இதில் உன்னை மன்னிப்பதற்கு என்ன இருக்கிறது? துரியோதனன் சபையிலே நான் இருக்கும் போது என்க்கு அந்த அறிவு இருக்கத்தான் செய்தது. ஆனால் துஷ்டனான துரியோதனின் உணவை நான் அப்போது உண்டேன். அதன் காரணமாக என் அறிவு மழுங்கிப் போய்விட்டது! நல்லது கெட்டதைப் பற்றி ஆலோசிக்க முடியாமல் போய்விட்டது. தீயவர்கள் போடும் உணவை உண்டால் உண்பவரின் மனமும் உடலும் கெட்டுப் போய்விடும் என்று சாஸ்திரம் சொல்கிறது. ஆனால் இப்போது போரிலே அர்ஜுனன் என்மேல் எய்த அம்புகளாலே என் உடலிலே இருந்த இரத்தம் எல்லாம் வெளியேறிவிட்டது. கெட்ட உணவை உண்டதாலே இரத்தம் முழுவதும் வெளியேறிவிட்டதாலே என் புத்தி தெளிந்து விட்டது.

அதனாலேதான் இப்போது இந்த அளவுக்கு தர்மத்தின் தத்துவங்களைச் சரியாக எடுத்துச் செல்ல முடிந்தது என்றார் பீஷ்மர். இதிலிருந்து நாம் தெரிந்து கொள்ள வேண்டியது என்னவென்றால் யார் சாப்பிடக் கூப்பிட்டாலும் முண்டியடித்துப்போய் முன்பந்தியிலே உட்காரக்கூடாது.

சாப்பிடக் கூப்பிட்டவர்கள் எப்படிப்பட்டவர்கள்? நல்லவர்களா என்று யோசிக்க வேண்டும்.

கெட்ட எண்ணத்துடன் போடும் சாப்பாடு புத்தியை மழுங்கடித்துவிடும். எத்தனையோ பெரிய உத்தியோகத்தில் இருக்கிறவர்களை விருந்துக்குக் கூப்பிட்டு சாப்பிட்டு முடித்த கையோடு முக்கியமான பேப்பரில் எல்லாம் கையெழுத்து வாங்கிவிடுவார்கள். முக்கியமாக பெரிய பொறுப்பிலே இருக்கிறவர்கள் யாராவது சாப்பிடக்கூப்பிட்டால் கொஞ்சம் யோசிக்கவும். கூப்பிடுபவர்களின் மனதைப் புரிந்துகொண்டு பின்பு போவதா விடுவதா என்று முடிவு செய்யவேண்டும். சாப்பாட்டிலே அவ்வளவு விடயம் இருக்கிறது. பீஷ்மருக்கே அந்த நிலைமை என்றால் நமக்கெல்லாம் எம் மாத்திரம்? சில சந்தர்ப்பங்களிலே சாப்பாடு புத்தியிலே ஒரு தெளிவை உண்டாக்குவதும் உண்டு. ஒரு ஊருக்கு ஒரு பெரிய மகான் வந்தார். அவர் சாப்பிடுவது இல்லை. எப்போதாவது கொஞ்சம் தண்ணீர், பால் அவ்வளவுதான்! ருசியை எல்லாம் கடந்தவர்! அவரிடம் போய் எல்லோரும் ஆசீர்வாதம் வாங்கினார்கள்.

அந்த ஊரிலே ஒரு உணவகம். அதனுடைய முதலாளி ஒருவரும் அந்த மகானிடம் ஆசீர்வாதம் வாங்கப் போனார். அவர் முன்னால் பணிவாக நின்றார். துண்டை இடுப்பில் கட்டிக்கொண்டு காலில் விழப்போனார் அதற்கு முன்னால் அந்த மகான் எழுந்து இவர் காலில் விழுந்து விட்டார். உணவக முதலாளி பதறிப் போய்விட்டார். சுவாமி! என்ன இது அபச்சாரம். நீங்கள் தான் என்னை ஆசீர்வாதம் செய்ய வேண்டும் என்றார். அதற்கு அந்த சாமியார் சொன்னார் அப்படி எல்லாம் இல்லை நீங்கள் தான் என்னை ஆசீர்வாதம் செய்யவேண்டும்.ஏனென்றால் கொஞ்சக் காலத்திற்கு முன் உங்கள் உணவகத்தில் தான் நான் கணக்கு வைத்து சாப்பிட்டுக் கொண்டிருந்தேன். இன்று நான் ருசிகளையெல்லாம் வெறுத்து ஞானியாகுவதற்கு காரணம் நீங்கள் தான் என்றார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கிராஞ்சி, கரைச்சி பகுதிகளில் காற்றாலை நிறுவ ஆராய்வு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட கிராஞ்சிப் பகுதியில் (வேராவில்) 204 மெகாவாட் காற்றாலை மின் திட்டம் மற்றும் கரைச்சிப் பகுதியில் 100 மெகா வாட் காற்றாலை மின் திட்டம் ஆகிய இரு பிரதான திட்டங்கள் நடைமுறைப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.



இந்நிலையில் குறித்த இரு காற்றாலை மின் திட்டங்கள் தொடர்பில் பங்குதாரர்களுடனான கலந்துரையாடல் நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகார சபையின் ஏற்பாட்டில், கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் எஸ்.முரளிதரன் தலைமையில் நடைபெற்றது.

கிராஞ்சி (வேராவில்) 204 மெகாவாட் காற்றாலை மின் திட்டத்திற்கு பெறப்பட்டுள்ள சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையின் (EIA) விடயங்கள் தொடர்பில் துறை சார்ந்த திணைக்கள அதிகாரிகளுக்கு விளக்கமளிக்கப்பட்டு அவர்களது ஆலோசனைக் கருத்துக்கள் பெறப்பட்டுள்ளன.

மேலும் கரைச்சி 100 மெகா வாட் காற்றாலை மின் திட்டத்திற்கான சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை (EIA) பெறப்படவுள்ள நிலையில், அதன் செயற்பாடுகள் தொடர்பில் விளக்கமளிக்கப்பட்டு ஆலோசனைக் கருத்துக்கள் பெறப்பட்டன.

தொடர்ந்து இவை அடுத்து வரும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திற்கு சமர்ப்பிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(6-8-315-316)

## ஈச்சிலவக்கை கிராம

# உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த நடவடிக்கை

(குருமன்காடு)

மாந்தை மேற்கு- ஈச்சிலவக்கை கிராம உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தத் துரித நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் ம.ஜெகதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

மன்னார் மாவட்டத்தின் உயிலங்குளம், அடம்பன், ஈச்சிலவக்கை ஆகிய கிராமங்களுக்கு நேற்று முன்தினம் சென்று அங்குள்ள மக்களைச் சந்தித்து கலந்துரையாடிய பின் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில், உயிலங்குளம் ஆரம்ப மருத்துவ மனையானது பல குறைபாடுகளுடன் காணப்படுகின்றது. இவற்றை கிளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டத்தின் மூலம் சுத்தப்படுத்தவுள்ளதுடன் மருந்துகளை வைத்து பராமரிப்பதற்கான குளிரூட்டப்பட்ட வசதிகள் கொண்ட களஞ்சியசாலை என்பவற்றையும் செய்து கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரிவித்தார்.

மாந்தை மேற்கு பிரதேசத்தில் உள்ள ஈச்சிலவக்கை கிராமம் மிகுந்த பின் தங்கிய கிராமமாக உள்ளது. அந்தக் கிராமத்தில் பல உட்கட்டமைப்பு வசதிகள் செய்து கொடுக்க வேண்டிய தேவை இருக்கிறது. அதனைக் கருத்தில் கொண்டு அதே பிரதேச செயலக பிரிவில் மூன்று கிராமங்களை உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காகத் தெரிவு செய்துள்ளோம். அதில் ஈச்சிலவக்கைக் கிராமமும் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

எமது தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் துரிதமாக, இனங்காணப்பட்ட இவ் வேலைகளைச் செய்து முடிக்கத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கும் எனத் தெரிவித்தார்.

(6-8-250)



வவுனியா சமுதாய பொலிஸ் குழுவின் ஏற்பாட்டில் சுதந்திர தினத்தை முன்னிட்டு கடந்த 4 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தில் பயன்தரு மரங்கள் நாட்டி வைக்கப்பட்டன. (படம்: வசந்தரூபன்)



கிளிநொச்சி டிப்போ சந்தியிலுள்ள இராணுவ நினைவுத் தூபி வளாகத்தில் இராணுவத்தினரால் அமைக்கப்பட்ட சிறுவர் பூங்கா வினை கடந்த 4 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை யாழ்.மாவட்ட பாதுகாப்பு படைகளின் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் வை.ஏ.பி.எம் யஹாம்பத் திறந்து வைத்தார். குறித்த நிகழ்வில் மாவட்ட அரசாங்க அதிபர் எஸ்.முரளிதரன், கரைச்சி பிரதேச செயலாளர் த.முகுந்தன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

(படம்: தேவானந்தன்)

# நிலக்கடலை மதிப்புக்கூட்டலலகு ஒட்டுசுட்டானில் திறந்து வைப்பு



(முல்லைத்தீவு)

விவசாய நவீனமயமாக்கல் திட்டத்தின் கீழ் வடமாகாணத்தில் முதன்முறையாக முழுமையாக இயந்திரமயமாக்கப்பட்ட நிலக்கடலை மதிப்புக் கூட்டல் அலகு ஒட்டுசுட்டானில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் முத்துவிநாயகர் புரத்தில் முல்லை அக்கிரிபிஸ்னஸ் லிமிடெட் நிறுவனத்தில் நேற்று முன்தினம் வடமாகாண ஆளுநரால் திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிறுவனத்தின் உற்பத்திகள் வடக்கு மாகாணத்தின் பல பகுதிகளிலும் விற்பனை செய்யப்பட்டு வருகின்ற நிலையில் சந்தைக் கேள்விகளை ஈடு செய்ய முடியாத நிலைமை இருந்து வந்தது.

தற்போது உழவு, நாற்று நடுகை, அறுவடையிலிருந்து பொதி செய்தல் வரையில் இயந்திரமயமாக்கப்பட்டுள்ள நிலையில் சந்தைக் கேள்விகளை ஈடுசெய்யக் கூடியளவு உற்பத்திகளை மேற்கொள்ளும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

மேலும் அந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த இளைஞர் மற்றும் இளம்பெண்களுக்கும் தொழில் வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.

(6-8)

# நெல்லுக்கான நிர்ணய விலையில் விவசாயிகள் அதிருப்தி

(தருமபுரம்)

நெல்லுக்கான விலை உரிய நேரத்தில் நிர்ணயிக்கப்படவில்லை என்றும் தற்பொழுது நிர்ணயிக்கப்பட்ட விலையும் போதுமானதாக அமையவில்லை எனவும் விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

அந்த வகையில் சிவப்பு நெல் 120 ரூபாவாகவும், சம்பா நெல் 125 ரூபாவாகவும் கீரிச்சம்பா 132 ரூபாவாகவும் அரசாங்கத்தினால் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

நெல்லுக்கான விலை அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் ஒரு மூடை நெல்லினை 8000 ரூபாய்க்கு தனியார் கொள்வனவு செய்கின்றனர்.

விவசாயிகளாகிய எமக்கு இம்முறை பாரிய மழை வெள்ளம் மற்றும் நோய்த் தாக்கம் காரணமாக அழிவு ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் பத்தாயிரம் ரூபாய்க்கு கூட நெல்லை விற்பனை செய்தாலும் எமது நட்டத்தினை ஈடு செய்ய முடியாத நிலையில் உள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். (6-8-316)

# 95 பாடசாலைக் கட்டடங்கள்; வடக்கில் புனரமைக்க நடவடிக்கை

(குருமன்காடு)

ஜப்பானின் அரச சார்பற்ற நிறுவனத்தின் நிதி உதவியில் வடக்கில் 95 பாடசாலைக் கட்டடங்களைப் புனரமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வவுனியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் சேவாலங்கா நிறுவனமானது ஜப்பானின் நிப்பொன் பவுண்டேசன் என்ற அரச சார்பற்ற நிறுவனத்தின் நிதி உதவியுடன் வடமாகாணத்தில் 95 பாடசாலைக் கட்டடங்களைப் புனரமைத்தல் மற்றும் புதிதாக நிர்மாணித்தல் வேலைத் திட்டத்தினை மேற்கொள்ளவுள்ளது.

அதன் ஒரு கட்டமாக வவுனியா முஸ்லிம் மகாவித்தியாலயத்தின் மாணவர்களுக்கான வகுப்பறைக்கட்டடம்ஒன்றினைப் புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஜப்பானில் இருந்து வருகை தந்த நிப்பொன் பவுண்டேசன் உயர் அதிகாரிகள், சேவாலங்கா நிறுவனத்தினர் ஆகியோர் வவுனியா முஸ்லிம் மகாவித்தியாலயத்திற்கு விஜயம் செய்து சேதமடைந்த கட்டடத்தைப் பார்வையிட்டனர்.

அதேவேளை வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் த.முகுந்தன், பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் ஆகியோருடனும் இதன்போது கலந்துரையாடி இருந்தனர்.

(6-8-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இந்துக்களின் சமர் யாழ்.இந்து முன்நிலை

இந்துக்களின் போர் என அழைக்கப்படும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கும் கொழும்பு இந்துக் கல்லூரிக்கும் இடையிலான 14 ஆவது இந்துக்களின் போர் துடுப்பாட்டப் போட்டி நேற்று யாழ்.இந்துக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமானது.

இதன்போது நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி முதலில் துடுப்பாட்டத்தைத் தெரிவு செய்தது.

முதல் இன்னிங்ஸில் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி 43.5 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 172 ஓட்டங்களை பெற்றுக்கொண்டனர்.

துடுப்பாட்டத்தில் யாழ்.இந்துக் கல்லூரி சார்பாக எ.விதுஸன்-49, கே.பரேஷ்ஷித்-20, சு.சுபர்ணன்-16, ரி.பிரீத்திகன்-14, ஜே.பஹவாணன் மற்றும் ரி.பிரீமிகன் ஆகியோர் 12 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தனர்.



பந்துவீச்சில் கொழும்பு இந்துக் கல்லூரி சார்பாக வி.யுவராஜ்-4, ஆர்.நேஸ்கர், பி. ஸ்ரீநிலுசான் மற்றும் ரி.சந்தோஷ்-1 என விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கொழும்பு இந்துக்கல்லூரி யாழ்.இந்துவின் சுழற்பந்து வீச்சினை எதிர்கொள்ள சிரமப்பட்டதையடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்து 91 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டனர்.

பந்துவீச்சில் க.நிதீஷ்க்கு-4, சு.சுபர்ணன்-2, எ.விதுஷன்-2, எஸ்.ஹரிகரன்-1 என விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

கொழும்பு இந்துக்கல்லூரி சார்பாக ரி.சந்தோஷ் 43 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்திருந்தார். இரண்டாவது இன்னிங்ஸில் விளையாடி வரும் யாழ். இந்துக் கல்லூரி முன்நிலை வகிக்கிறது. (6-8-33)

# ஸ்ரேயாஸ், சுப்மன், அக்சர் அதிரடி இங்கிலாந்தை வீழ்த்திய இந்தியா



இங்கிலாந்துக்கு எதிரான முதல் போட்டியில் இந்தியா 4 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இந்தியா வந்துள்ள இங்கிலாந்து அணி மூன்று போட்டி கொண்ட ஒருநாள் தொடரில் பங்கேற்கிறது. இதன் முதல் போட்டி மகாராஷ்டிராவில் உள்ள நாக்பூரில் கடந்த புதன் கிழமை நடைபெற்றது.

"டாஸ்" வென்ற இங்கிலாந்து அணி கப்டன் பட்லர், பட்டிங் தேர்வு செய்தார். இந்திய அணியில் ஜெய்ஸ்வால், ஹர்ஷித் ராணா என இருவர் அறிமுகம் ஆகியிருந்தனர். இங்கிலாந்து அணிக்கு பில் சால்ட் (43), டக்கெட் (32) ஜோடி துவக்கம் தந்தது. ஜடேஜா, ரூட்டை (19) வெளியேற்றினார்.

பட்லர் அரைசதம் எட்டினார். இவர் 52 ரன் எடுத்த போது, அக்சர் படேல் சுழலில் சிக்க லிவிங்ஸ்டன் (5), கார்ஸ் (10) கைவிட்டனர்.

ஒருநாள் அரங்கில் 2ஆவது அரைசதம் எட்டிய பெத்தெலை (52), ஜடேஜா அவுட்டாக்கினார்.

இங்கிலாந்து அணி 47.4 ஓவரில் 248 ரன்னுக்கு ஒல் அவுட்டானது. இந்திய சார்பில் ஹர்ஷித் 3, ஜடேஜா 3 விக்கெட் சாய்த்தனர்.

இந்திய அணிக்கு கப்டன் ரோகித் சர்மா (2), ஜெய்ஸ்வால் (15) ஜோடி மோசமான தொடக்கம் தந்தது. ஸ்ரேயாஸ் (59), 30 ஆவது பந்தில் அரைசதம் எட்டினார். சுப்மன் கில், ஒருநாள் அரங்கில் 14ஆவது, இங்கிலாந்துக்கு எதிராக முதல் அரைசதம் எட்டினார்.

அக்சர் தன் பங்கிற்குச் சொந்த மண்ணில் முதன் முறையாக ஒருநாள் போட்டியில் அரைசதம் அடித்தார்.

4 ஆவது விக்கெட்டுக்கு 108 ரன் சேர்த்த போது, அக்சர் (52) அவுட்டானார். அடுத்து வந்த ராகுல் (2) நிலைக்கவில்லை. அடுத்த சில நிமிடத்தில் சுப்மனும் (87) திரும்பினார்.

இருப்பினும் இந்திய அணி 38.4 ஓவரில் 251/6 ரன் எடுத்து 4 விக்கெட்டினால் வெற்றி பெற்றது. தொடரில் 1-0 என முன்னிலை பெற்றது. (6-8)

# பும்ராவை பற்றி எங்களுக்கு கவலை இல்லை-பாக்.பயிற்சியாளர்



8 அணிகள் பங்கேற்கும் சம்பியன்ஸ் ட்ராபி கிரிக்கெட் போட்டி எதிர்வரும் 19 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

இதில் இந்தியா-பாகிஸ்தான் அணிகள் மோதும் போட்டி எதிர்வரும் 23 ஆம் திகதி டுபாயில் நடக்கிறது. இப்போட்டி ரசிகர்கள் மத்தியில் மிகுந்த எதிர்பார்ப்பை ஏற்படுத்தி இருக்கிறது.

இந்த நிலையில் பாகிஸ்தான் அணி தலைமைப் பயிற்சியாளர் ஆகிப் ஜாவேந் கூறியதாவது,



சம்பியன்ஸ் ட்ராபியில் முதல் 8 சிறந்த அணிகள் விளையாடுகின்றன. இதில் எந்த அணியையும் நீங்கள் எளிதாக எடுத்துக் கொள்ள முடியாது. எந்த அணியிலும் பும்ரா போன்ற ஒரு பந்து வீச்சாளர் இருந்தால், அது அந்த அணிக்கு பலமாக இருக்கும்.

பும்ராவின் உடற்தகுதி குறித்து இந்தியா கவலைப்பட வேண்டும்.

பும்ரா பற்றி நாங்கள் கவலைப்பட வில்லை.

சமீப காலமாக 20 ஓவர் கிரிக்கெட்டில் 200 ரன்கள் அளவுகோலாக மாறி விட்டது. எனவே ஒருநாள் போட்டிகளில் 325 அல்லது 350 ரன்கள் கூட சாத்தியமாகும்.

குறிப்பாக பீல்டிங் கட்டுப்பாடுகளில் மாற்றம் கொண்டு வரப்பட்டதால் அதிக ரன்கள் குவிக்கப்பட்டு வருவதாகக் கூறினார். (6-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவறுகளில் தேங்கிக்கிடப்பதே முன்னேற்றத்திற்கான முக்கிய தடையாகும். – அறிஞர்

வலம்புரி
TP : 021 222 3378
website : www.valampurii.lk

## வடக்கு ஆளுநருக்கு ஓர் அவரச மடல்

வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் அவர்களுக்கு அன்பு வணக்கம்.

காலத்தின் தேவை கருதி இந்த மடலை தங்களுக்கு அவசரமாக எழுத வேண்டியதாயிற்று.

ஏலவே முன்பு இருந்த ஆளுநருக்கு ஓர் அவசர மடல் எழுத, அது தொடர்பில் அவர் எமக்கு எதிராக யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ய, ஈற்றில் யாம் வாக்குமூலம் வழங்கியதே அந்த அவசர மடலின் கதியாயிற்று.

பரவாயில்லை. நேர்மையில்லாதவர்களின் பிரசன்னம் நாட்டுக்கும் மக்களுக்கும் அபத்தமாகவே முடியும்.

ஆகையால் அதுபற்றியெல்லாம் நாம் இங்கு பிரஸ்தாபித்து நேரத்தை வீணடிக்க விரும்பவில்லை.

மாறாக, இப்போது இந்த மடலை தங்களுக்கு எழுத வேண்டிய தேவை எங்கள் வடபுலத்தின் பொருளாதாரத்தில் காத்திரமான பங்கை வகிக்கக்கூடிய தென்னை மரங்களைப் பாதுகாப்பதற்கானதாகும்.

ஆம், வடபுலத்தில் தென்னை மரங்களில் மீண்டும் வெள்ளை ஈ தொற்று வேகமாகப் பரவத் தொடங்கியுள்ளது.

ஏற்கெனவே வெள்ளை ஈ தொற்று வேகமாகப் பரவியதன் காரணமாக எங்கள் தென்னை வளம் பெரும் பாதிப்புக்குள்ளாயிற்று.

அதிலும் குறிப்பாக வீட்டு வளவுகளில் நின்ற தென்னைகளைத் தறிக்கின்ற அளவுக்கு நிலைமை மோசமாகியது.

ஏதோ மாரி மழை பெய்ததன் காரணமாக வெள்ளை ஈ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

ஆனால் மீண்டும் வெள்ளை ஈ மிக வேகமாகப் பரவத் தொடங்கியுள்ளது.

இதனை மிக விரைவாகக் கட்டுப்படுத்தத் தவறுவோமாயின், எங்கள் தென்னை வளம் முற்று முழுதாக அழிந்துபோவது தவிர்க்க முடியாததாகிவிடும்.

எனவே எங்களின் தென்னை வளங்களைப் பாதுகாக்கும் பொருட்டு வெள்ளை ஈக்களை அழிக்கின்ற வேலைத்திட்டங்களை போர்க்கால நடவடிக்கைக்கு ஒப்பாக முன்னெடுக்க வேண்டும்.

**ஆகவே இதுதொடர்பில் அவசரமாக ஒரு மாநாட்டை கூட்டி, அதில் துறைசார்ந்த நிபுணர்களை அழைத்து தென்னை மரத்தை பாதிக்கின்ற வெள்ளை ஈக்களை அழிக்கின்ற வேலைத் திட்டத்தை உடனடியாக ஆரம்பிப்பது கட்டாயமானதாகும்.**

அதேவேளை குறித்த வேலைத்திட்டத்தை வட மாகாணம் முழுமைக்கும் ஒரே நேரத்தில் அமுல்படுத்தும்போதுதான் குறித்த வெள்ளை ஈ பரவலைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியும்.

இதுவிடயத்தில் படைத்தரப்பின் ஒத்துழைப்பையும் பெற்றுக் கொள்வது அவசியமாகும்.

இதை நாம் செய்யத் தவறும்போது வெள்ளை ஈ பரவல் வட மாகாணம் முழுமைக்கும் பற்றிப் பரவி விடும்.

ஆகையால் காலதாமதமின்றி வடக்கில் தென்னைகளைப் பாதுகாக்க தாங்கள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை இவ் அவசர மடலினூடாகத் தங்களிடம் தாழ்மையாகக் கேட்டுக் கொள்கிறோம்.

# கச்சதீவு திருவிழாவிற்கான போக்குவரத்து ஏற்பாடு

## நெடு.ஒருவழிக்கட்டணம் ரூ.1000
## குறிக.ஒருவழிக்கட்டணம் ரூ.1300

(யாழ்ப்பாணம்)

இவ்வருடம் இலங்கையிலிருந்து 4000, இந்தியாவிலிருந்து 4000 என 8 ஆயிரம் யாத்திரிகர்களும் மேலதிகமாக உத்தியோகத்தர்கள், ஏனையோர் என ஆயிரம்பேர் உள்ளடங்கலாக 9 ஆயிரம் பேர் கச்சதீவு பெருந் திருவிழாவில் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய வருடாந்த திருவிழாவுக்கான ஏற்பாடு குறித்த கலந்துரையாடல் நேற்று யாழ். மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

எதிர்வரும் மார்ச் மாதம் 14 மற்றும் 15ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள திருவிழா தொடர்பில் யாழ். மாவட்ட செயலர் ம.பிரதீபன் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில்,

கச்சதீவு பிரதேசத்தை பொது மக்களின் வழிபாட்டுக்கு ஏற்ற வகையில் தயார்படுத்தல் குறித்தான நடவடிக்கைகள் கடற்படையால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதில் பிரதேச சபையின் உத்தியோகத்தர்களும் இணைந்துள்ளார்கள்.

இதில் கலந்து கொள்பவர்களுக்குரிய உணவு, குடிநீர் விநியோகம், மலசலகூட வசதிகள் குறித்து ஆராயப்பட்டது.

போக்குவரத்துக்காக இ.போ.ச வின் பேருந்துகளும் தனியார் போக்குவரத்துத் துறையினரின் பேருந்துகளும் பயன்படுத்தப்படவுள்ளன. 14ஆம் திகதி காலை 4 மணி முதல் 11.30 வரை யாழ்ப்பாணம் பேருந்து நிலையத்திலிருந்து அந்த பேருந்துகள் புறப்படும்.

மேலும் போக்குவரத்து கட்டணமாக, நெடுந்தீவில் இருந்து கச்சதீவு செல்வதற்குரிய ஒருவழிக் கட்டணமாக ஆயிரம் ரூபாவும், குறிகட்டுவானில் இருந்து கச்சதீவு செல்பவர்களுக்குரிய ஒருவழிக் கட்டணமாக ஆயிரத்து முந்நூறு ரூபாவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

படகு சேவையில் ஈடுபடுகின்ற படகின் உரிமையாளர்கள், பொதுமக்களின் போக்குவரத்துக்கு ஏற்ற வகையில் அதற்குரிய சான்றிதழ்களை கடற்படையினரிடம் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (6-8-33)

# டிஜிற்றல் மயமாக்கல்

## நாட்டை புதிய நிலைக்கு உயர்த்தும்

## ஜனாதிபதி அநுர தெரிவிப்பு

(கொழும்பு)

தொழில்நுட்பம் மற்றும் அறிவியலினால் ஏற்படும் முன்னேற்றங்கள் மக்களின் வாழ்வை இலகுவாக்குவதாகவும் இதன் மூலம் வினைத்திறனான, தரமான மற்றும் விரயம் குறைந்த சேவைகளைப் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

டிஜிற்றல் சமூகத்தை நோக்கி நாட்டை நகர்த்தும் வேலைத்திட்டத்தின் ஊடாக மூன்று பிரதான டிஜிற்றல் வசதிகள், ஜனாதிபதி தலைமையில் ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று ஆரம்பிக்கப்பட்டது. அதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி நிதியத்தின் பணிகள் இதுவரை காலமும் கொழும்பில் இருந்தே செயற்படுவதாகவும் அதனால் தூரப் பிரதேசங்களில் உள்ள பிரஜைகள் பல சிரமங்களை எதிர்நோக்க வேண்டியிருப்பதாகவும் சுட்டிக் காட்டிய ஜனாதிபதி பிரதேச செயலக மட்டத்தில் குறித்த முறைமையை உடனடியாக செயற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் தெரிவித்தார்.

அதன்படி அரச டிஜிற்றல் கொடுப்பனவு தளமொன்றை உருவாக்குதல் (GovPay). ஜனாதிபதி நிதியத்தின் சேவைகளை பிரதேச செயலக மட்டத்திற்கு கொண்டு செல்லல். தூதரகங்களிலிருந்து பிறப்பு, திருமணம் மற்றும் இறப்பு சான்றிதழ்களை மென் பொருள் மூலம் பெற்றுக் கொள்ளல் என்பன மேற்கொள்ளப்படும்.

நீண்ட காலத்துக்கு முன்னரே இவ்வாறான தீர்மானங்கள் எடுக்கப்பட்டிருக்க வேண்டும் எனவும், சரியான நேரத்தில் தீர்மானங்கள் எடுக்கப்படாமையினால் மக்களின் வாழ்க்கையும் நாட்டின் பொருளாதாரமும் பின்னடைந்து காணப்படுவதோடு, இன்றைய தினம் டிஜிற்றல் மயமாக்கல் மூலமாக நகரமும் கிராமமும் ஒன்றிணைந்துள்ளதால் கிராமிய வறுமையை ஒழிப்பதற்கும், பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கும் டிஜிற்றல் மயமாக்கல் மிகவும் அவசியமானது எனவும் ஜனாதிபதி சுட்டிக் காட்டினார். (நி-8)

# 13 இந்திய மீனவர்கள் விடுவிப்பு நால்வருக்கு விளக்கமறியல்

(மன்னார்)

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட 17 இந்திய மீனவர்களில் 13 பேர் விடுதலை செய்யப்பட்டதோடு, ஏனைய நால்வரையும் விளக்கமறியலில் வைக்க நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

17 இந்திய மீனவர்கள் கடந்த டிசம்பர் மாதம் 24 ஆம் திகதி அதிகாலை தலை மன்னார் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு மேலதிக விசாரணைகளுக்காக மன்னார் கடற்றொழில் நீரியல் வளத்திணைக்களத்தில் ஒப்படைக்கப்பட்டிருந்தனர்.

கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளின் விசாரணையின் பின்னர் மன்னார் நீதவான் நீதிமன்றத்தில் 17 சந்தேக நபர்களையும் ஆஜர்படுத்திய நிலையில் குறித்த மீனவர்களையும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டிருந்தார்.

தொடர்ந்து விசாரணைகள் நடைபெற்று வந்த நிலையில் நேற்று மீண்டும் வழக்கு விசாரணைகளுக்கு அழைத்து வரப்பட்டனர்.

விசாரணை முடிவில் குறித்த 17 இந்திய மீனவர்களில் இரு மீனவர்களுக்கு கைவிரல் அடையாளங்கள் பெறப்படாத காரணங்களினால் இருவரையும் எதிர்வரும் 13 ஆம் திகதி வரைக்கும் விளக்கமறியலில் வைக்குமாறும், மேலும் இரண்டு மீனவர்களுக்கு இரண்டாவது தடவையாகவும் எல்லை தாண்டி சட்டவிரோத இழுவை மடி வலையைப் பயன்படுத்தி மீன் பிடித்த குற்றத்திற்காக இரண்டு வருட கடூழிய சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டது.

ஏனைய 13 பேருக்கும் 50 ஆயிரம் ரூபாய் தண்டபணத்துடன் கூடிய இரண்டு வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 10 வருட சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டு 13 பேரையும் மன்னார் நீதிமன்றம் விடுதலை செய்தது. (6-8-285)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நடக்கவிருக்கும் உள்ளூராட்சி சபைத்தேர்தலில் போட்டியிட இருக்கும் இளம் சமூகத்தினருக்கான தெளிவூட்டல் பகுதி - II

16

கலாநிதி க. தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம், தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.

எல்லாமாக மொத்தம் 11 பெண்கள் யாழ்ப்பாணம் மாநகர சபையில் உறுப்பினர்களாக இருந்தனர்.

வல்வெட்டித்துறை நகர சபையைப் பொறுத்தவரை பொலிகண்டி வட்டாரத்திலிருந்து அன்ரனெற் சுபாசினி இமானுவல் சிறில் ஜெயராஜாவும் மயிலியதனை வட்டாரத்திலிருந்து இராஜேஸ்வரி குணரத்தினமும் தெரிவுசெய்யப்பட்டனர். பட்டியலிலிருந்து பிறேமதாஸ் ஞானேஸ்வரி மற்றும் கைலாஜினி இந்திரன் தெரிவுசெய்யப்பட்டனர். எல்லாமாக மொத்தம் நான்கு பெண்கள் வல்வெட்டித்துறை நகர சபையில் உறுப்பினர்களாக இருந்தனர்.

பருத்தித்துறை நகர சபையைப் பொறுத்தவரை பட்டியலிலிருந்து ஜங்கரதாஸ் இளவரசி, மதினி நெல்சன், பாமதி கதிரமலை, ஸ்ரீவாணி தீபன், கைலாயநாதன் துஜேனா என ஐந்து பெண்கள் தெரிவுசெய்யப்பட்டனர்.

சாவகச்சேரி நகர சபைக்கு பட்டியலிலிருந்து தயாளராசன் பவுலினா சுபோதினி, சிவமங்கை இராமநாதன், லலிதாராணி ரவீந்திரன், சண்முகரஞ்சினி சடாஸ்வரன் என நான்கு பெண்கள் தெரிவுசெய்யப்பட்டனர்.

காரைநகர் பிரதேச சபைக்கு பட்டியலிலிருந்து கனகசபை தவமணி தேவி, பாஸ்கரன் கலாமாலினி, தவமணி பரமானந்தம் என மூன்று பெண்கள் தெரிவு செய்யப் பட்டனர்.

ஊர்காவற்றுறை பிரதேச சபையைப் பொறுத்தவரை அனலைதீவு வடக்கு வட்டாரத்திலிருந்து கணேஸ் வினோதினியும் பட்டியலிலிருந்து அல்வீனம்மா யோக நாதன், சுபத்திரா வின்சன், இரத்தின மாலா சுதர்சன் என மூன்று பெண்கள் தெரிவுசெய்யப்பட்டனர். எல்லாமாக நான்கு பெண் உறுப்பினர்கள் ஊர்காவற்றுறை பிரதேச சபையில் இருந்தனர்.

நெடுந்தீவு பிரதேச சபைக்கு பட்டியலிலிருந்து சின்னத்தம்பி தங்கேஸ்வரி, சிந்தைகுலநாயகி அனுசாந்தன், அம்பலவாணி சண்முகரத்தினம் என மூன்று பெண்கள் தெரிவுசெய்யப்பட்டனர்.

வேலணை பிரதேச சபையைப் பொறுத்தவரை புங்குடுதீவு கிழக்கு வட்டாரத்திலிருந்து சாந்தகுமார் யசோதினியும் பட்டியலிலிருந்து அன்ரனி அமிர்தநாதர் மேரிமற்றில்டா மற்றும் அனுஷியா ஜெயகாந்த் என எல்லாமாக மூன்று பெண்கள் தெரிவுசெய்யப்பட்டனர்.

வலிகாமம் மேற்கு பிரதேச சபைக்கு பட்டியலிலிருந்து விஜயகுமார் தீவிகா, செந்தமிழ்ச்செல்வன் சுபாஜினி, பன்னீர்செல்வம் நின்மதி, துளசி சந்திரமோகன், துவாரகா தேவி ஜெயகாந்தன், சுதர்சினி கேதீஸ்வரன் என ஆறு பெண்கள் தெரிவுசெய்யப்பட்டனர்.

வலிகாமம் வடக்கு பிரதேச சபையைப் பொறுத்தவரை பலாலி வடக்கு வட்டாரத்திலிருந்து மேரி ஆன் சகாயராணி குவேந்திரராசாவும் வறுத்தலைவிளான் வட்டாரத்திலிருந்து சுபாஸ்கரன் சந்திரமதியும் தெரிவுசெய்யப்பட்டனர். பட்டியலிலிருந்துசிவராசா தயாவதி, பிரே மலதா பாஸ்கரன், தியாகராசா ரசீதா, அனுஷாவதி இதயதாஸ் மற்றும் புவனேஸ்வரன் வதனி ஆகிய ஐந்து பெண்கள் தெரிவுசெய்யப்பட்டனர். எல்லாமாக ஏழு பெண் உறுப்பினர்கள் வலிகாமம் வடக்கு பிரதேச சபையில் இருந்தனர்.

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையைப் பொறுத்தவரை ஆனைக்கோட்டை வட்டாரத்திலிருந்து சிவராசா மரிய ரோசானியும் பட்டியலிலிருந்து சுசீபா ஜெயராமசர்மா, மைதிலி வயிரவநாதன், செந்தினி தருமசீலன், இராஜகுமாரி ஆனந்தராசா, ராஜினி சவுந்தரநாயகம், மற்றும் சிவனேஸ்வரி வாசுதேவன் ஆகிய ஆறு பெண்கள் தெரிவு செய்யப்பட்டனர். எல்லாமாக ஏழு பெண் உறுப்பினர்கள் வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையில் இருந்தனர்.

வலிகாமம் தெற்கு பிரதேச சபையைப் பொறுத்தவரை கந்தரோடை வட்டாரத்திலிருந்து ரவிக்குமார் யோகாதேவி, உடுவில் தென்கிழக்கு வட்டாரத்திலிருந்து சந்திரவதனி காந்தராசா, தாவடி வடக்கு வட்டாரத்திலிருந்து துஷ்யந்தினி அருள்பரன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். பட்டியலிலிருந்து அருள்நாதன் கிருஸ்ணவேணி, ஜெயராஜா தனுஜா, கஜேந்தினி யூட்ஸ், அபிராமி வாமதேவன், செல்வராசா காஜத்திரி மற்றும் சாதிகா கணேஷநாதன் ஆகிய ஆறு பெண்கள் தெரிவுசெய்யப்பட்டனர். எல்லாமாக எட்டு பெண் உறுப்பினர்கள் வலிகாமம் தெற்கு பிரதேச சபையில் இருந்தனர்.

வலிகாமம் கிழக்கு பிரதேச சபையைப் பொறுத்தவரை உரும்பிராய் மேற்கு வட்டாரத்திலிருந்து சதானந்தம் வேணுகா தெரிவுசெய்யப்பட்டார். பட்டியலிருந்து சிந்தியா சண்முகராசா, குலகௌரி கந்தன், சிவசுப்பிரமணியம் தனுஷா, ஞானகுணேஸ்வரி கமலச்செல்வம், தேவன் சசிநந்தினி, சிவலேகா இலட்சுமணன், இராசதுரை கோமதி, சரவணபவன் நகுலேஸ்வரி ஆகிய எட்டுப் பெண்கள் தெரிவு செய்யப்பட்டனர். எல்லாமாக ஒன்பது பெண் உறுப்பினர்கள் வலிகாமம் கிழக்கு பிரதேச சபையில் இருந்தனர்.

வடமராட்சி தென்மேற்கு பிரதேச சபைக்கு பட்டியலிலிருந்து இந்திராணி பாஸ்கரன், இராசையா சிவராணி, சிவராசா சிவரதி, கமலநாயகி சிவநேசன், செல்லத்துரை விஜிதா, கணபதி வள்ளிநாயகி மற்றும் சந்திரமோகன் சங்கீதா என ஏழு பெண்கள் தெரிவுசெய்யப்பட்டனர்.

பருத்தித்துறை பிரதேச சபைக்குப் பட்டியலிலிருந்து றஜிதா விஜயமுகன், சிவகுமார் கவிதா, சாந்தாதேவி தர்மரத்தினம், கலாவதி பரமேஸ்வரன் என நான்கு பெண்கள் தெரிவுசெய்யப்பட்டனர்.

சாவகச்சேரி பிரதேச சபையைப் பொறுத்தவரை கைதடி தெற்கு வட்டாரத்திலிருந்து இராசேந்திரன் ஜானகியும் மீசாலை - இராமாவில வட்டாரத்திலிருந்து திலகராணி ஞானலிங்கமும், கச்சாய் - அல்லாரை வட்டாரத்திலிருந்து மகேந்திரராணி பொன்னம்பலமும் நாவற்குழி வட்டாரத்திலிருந்து ஞூர்துமேரி கனகரத்தினமும் தெரிவுசெய்யப்பட்டனர். பட்டியலிலிருந்து சிவகுண சோதி வல்லிபுரம், மல்லிகா பாலச்சந்திரன் மற்றும் பரதபத்மா விஜயரூபன் என மூன்று பெண்கள் தெரிவுசெய்யப்பட்டனர். எல்லாமாக ஏழு பெண் உறுப்பினர்கள் சாவகச்சேரி பிரதேச சபையில் இருந்தனர்.

நல்லூர் பிரதேச சபையைப் பொறுத்தவரை திருநெல்வேலி வட்டாரத்திலிருந்து வாசுகி சுதாகர் தெரிவு செய்யப்பட்டார். பட்டியலிலிருந்து கௌசலா சிவா, அழகேந்திரம் அகிலாண்டரூபி, குலேந்திரன் பிரிந்தா மற்றும் சச்சிதானந்ததேவி செல்லத்துரை என நான்கு பெண்கள் தெரிவு செய்யப்பட்டனர். எல்லாமாக ஐந்து பெண் உறுப்பினர்கள் நல்லூர் பிரதேச சபையில் இருந்தனர்.

## 2018 ஆம் ஆண்டு உள்ளூராட்சித் தேர்தலில் கிளிநொச்சி மாவட்டத்தில் பெண்களின் பிரதிநிதித்துவம்

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையைப் பொறுத்தவரை முகாவில் வட்டாரத்திலிருந்து அருள்ச்செல்வி கனகராசா தெரிவு செய்யப்பட்டார். பட்டியலிலிருந்து ஈஸ்வரன் டயாளினி, தயானந்த குமார் சுகந்தி மற்றும் தியோப்பிள்ளை பிரமிளா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

(தொடரும்...)

உள்ளூராட்சி சபைகளுக்கு தெரிவுசெய்யப்பட்ட பெண் உறுப்பினர்களின் வீதம்
யாழ்ப்பாண மாவட்டம்

| உள்ளூராட்சி சபை | மொத்த உறுப்பினர்கள் | பெண் உறுப்பினர்கள் | பெண் % |
|---|---|---|---|
| யாழ்ப்பாண மாநகர சபை | 45 | 11 | 24.4% |
| வல்வெட்டித்துறை நகர சபை | 17 | 4 | 23.5% |
| பருத்தித்துறை நகர சபை | 15 | 5 | 33.3% |
| சாவகச்சேரி நகர சபை | 18 | 4 | 22.2% |
| காரைநகர் பிரதேச சபை | 11 | 3 | 27.3% |
| ஊர்காவற்றுறை பிரதேச சபை | 13 | 4 | 30.8% |
| நெடுந்தீவு பிரதேச சபை | 13 | 3 | 23.1% |
| வேலணை பிரதேச சபை | 20 | 3 | 15.0% |
| வலிகாமம் மேற்கு பிரதேச சபை | 25 | 6 | 24.0% |
| வலிகாமம் வடக்கு பிரதேச சபை | 39 | 7 | 17.9% |
| வலிகாமம் தென் மேற்கு பிரதேச சபை | 28 | 7 | 25.0% |
| வலிகாமம் தெற்கு பிரதேச சபை | 30 | 8 | 26.7% |
| வலிகாமம் கிழக்கு பிரதேச சபை | 38 | 9 | 23.7% |
| வடமராட்சி தென்மேற்கு பிரதேச சபை | 31 | 7 | 22.6% |
| பருத்தித்துறை பிரதேச சபை | 21 | 4 | 19.0% |
| சாவகச்சேரி பிரதேச சபை | 31 | 7 | 22.6% |
| நல்லூர் பிரதேச சபை | 20 | 5 | 25.0% |
| மொத்தம் | 415 | 97 | 23.4% |

குறிப்பு- ஒவ்வொரு உள்ளூராட்சி சபையிலும் நியமிக்கப்படவிருக்கின்ற உறுப்பினர் எண்ணிக்கையின் 1/4 பங்கு அதாவது 25% ஆன பெண் பிரதிநிதித்துவத்தினை உறுதிப்படுத்த வேண்டியது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரிசி விலை...

வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என விவசாயம் மற்றும் கால்நடைத் துறை பிரதி அமைச்சர் நாமல் கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

விவசாயிகளைக் கருத்திற்கொண்டு நிர்ணய விலையை அரசாங்கம் அறிவித்ததாகக் கூறிய அமைச்சர் அந்த விலைக்கு நெல்லைக் கொள்வனவு செய்து குறைந்த விலைக்கு அரிசி விநியோகிக்கப்படும் என்றும் உறுதியளித்தார். (ந-7)

## ஒட்டுமொத்த...

கடந்த வருடம் வெள்ளை ஈ தாக்கம் வடபகுதியிலுள்ள தென்னை மரங்களில் இருந்த போதிலும் மாரி மழை காரணமாக வெள்ளை ஈ கட்டுப்பாட்டுக்குள் வந்தது.

ஆனால் மழை காலம் முடிவுற்றதும் மீண்டும் வடபகுதியிலுள்ள தென்னை மரங்களில் வெள்ளை ஈ தாக்கம் கடுமையாகவுள்ளது.

இலட்சக்கணக்கான வெள்ளை ஈக்கள் தென்னை ஓலைகளில் தங்கியிருந்து எச்சம் இடுவதனால், தென்னை ஓலைகள் எண்ணெய்த் தன்மையுடன் கூடிய கருமை நிறமாக மாறுகின்றது.

அதேவேளை தென்னை ஓலையின் கீழ்ப் பகுதியில் பங்கசுகளும் பற்றிக் கொள்கின்றன.

இதனால் தென்னை ஓலைகள் காய்ந்து தென்னை மரங்கள் பட்டுப் போகின்ற கட்டத்தை அடைகின்றன.

எனவே வெள்ளை ஈ தாக்கத்தைக் கட்டுப்படுத்த சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென தென்னஞ் செய்கையாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ந-7)

## அநுரவுக்கு...

அழுத்தம் காரணமாகவே, குற்றச் செயல்களில் ஈடுபட்டுள்ள இராணுவம் மற்றும் பொலிஸாரை விடுவிக்க ஜனாதிபதி நடவடிக்கை எடுக்கின்றார் என்ற குற்றச்சாட்டுக்கள் தெற்கில் எழுந்துள்ளன.

ஊடகவியலாளர் லசந்த விக்ரமதுங்க கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்களை விடுதலை செய்ய சட்டமா அதிபர் எடுத்த தீர்மானம் ஜனாதிபதியின் பரிந்துரையின் அடிப்படையிலேயே எடுக்கப்பட்டுள்ளதாக சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

கொலையாளிகளைத் தப்பிக்க வைத்த பொலிஸார் மற்றும் அதிகாரிகளை விடுவிக்கும் தீர்மானத்தை ஜனவரி 27ஆம் திகதி குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளருக்கு அறிவித்துள்ள சட்டமா அதிபர் பாரிந்த ரணசிங்க கடிதம் கிடைத்த 14 நாட்களுக்குள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தில் எடுக்க வேண்டிய நடவடிக்கை குறித்து தன்னிடம் தெரிவிக்குமாறும் அறிவித்துள்ளார்.

தேசிய மக்கள் சக்தியின் ஓய்வு பெற்ற முப்படைகள் மன்றத்தின் தலைவரான ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் அருண ஜயசேகர தற்போது தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் பாதுகாப்புப் பிரதி அமைச்சராகவும், ஓய்வு பெற்ற சிரேஸ்ட பிரதிப் பொலிஸ் அதிபர்ரவி செனவிரத்ன பொதுமக்கள்பாதுகாப்பு அமைச்சின் செயலாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-7)

## ஊடகவியலாளர்...

நேற்று வெள்ளிக்கிழமை பாராளுமன்றில் உரையாற்றிய பிரதமர் ஹரிணி அமரசூரிய குறித்த உறுதிமொழியை வழங்கினார்.

இது தொடர்பில் மேலும் கருத்துத் தெரிவித்த பிரதமர்,

லசந்த விக்ரமதுங்கவின் கொலை தொடர்பாக அவரது மகள் அஹிம்சா அனுப்பிய கடிதம் கிடைக்கப் பெற்றுள்ளது. தேவையேற்படுமாயின், லசந்த விக்ரமதுங்கவின் படுகொலை தொடர்பில் புதிய வழக்குத் தாக்கல் செய்யப்படும்.

எங்கள் அரசாங்கத்தின் நிலைப்பாடு மிகவும் தெளிவாக உள்ளது. லசந்த விக்கிரமதுங்கவின் கொலைக்கு நீதி வழங்க நாங்கள் தயாராக இருக்கிறோம்.

கடந்த காலங்களிலும் எங்கள் நிலைப்பாடு அதுதான். இன்றும் எங்கள் நிலைப்பாடு அதுதான். இந்த விடயத்தில் நீதி வழங்க நாங்கள் முடிந்த அனைத்தையும் செய்வோம் என்று நான் அவருக்கு உறுதியளிக்கிறேன்.

இது தொடர்பில் ஜனாதிபதியுடனும் விரிவாகக் கலந்துரையாடியுள்ளோம். இந்த விடயத்தை நிவர்த்தி செய்யப் பாராளுமன்ற விவாதத்தை முழு நாளும் நடத்துவதற்கும் தயாராக உள்ளோம். ஏனெனில் அதன் தீவிரத் தன்மையை நாம் உணர்கிறோம்.

சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் தொடர்புடைய நிறுவனங்களில், நல்ல நோக்கங்களைக் கொண்ட அதிகாரிகள் இருந்தாலும், அவர்கள் ஒரு குறிப்பிட்ட வேலை முறைக்குப் பழகிவிட்டனர். அவர்கள் ஒரு குறிப்பிட்ட கலாசாரத்திற்குள் பணியாற்றியுள்ளனர்.

அந்த முறை மாற்றப்பட வேண்டும் அதற்குச் சில காலம் எடுக்கும். ஆனால் பாதிக்கப்பட்டவர்கள் பதில்களுக்காக எவ்வளவு காலமும் காத்திருக்க முடியும் என்பது அர்த்தமல்ல" என்றார். (ந-7)

## இலங்கையின்...

உறுதி செய்வதிலும் பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைளிலும் இந்தியா என்றும் உறுதுணையாக நிற்கும் என இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா உறுதியளித்துள்ளார்.

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா மற்றும் பாதுகாப்பு செயலாளர் ஓய்வு பெற்ற எயா வைஸ் மார்ஷல் சம்பத் துய்ய கொந்தா ஆகியோருக்கிடையில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற விசேட சந்திப்பின் போதே அவர் இதனை வலியுறுத்தியுள்ளார்.

இதன் போது இரு நாடுகளுக்கும் இடையிலான நீண்ட கால பாதுகாப்பு ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவதில் முக்கிய கவனம் செலுத்தப்பட்டதோடு, பண்டைய வரலாற்றிலிருந்து பிணைந்திருக்கும் இந்திய - இலங்கை இரு தரப்பு உறவுகளை மேம்படுத்துவது குறித்தும் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

பிராந்திய பாதுகாப்பு மற்றும் கடல்சார் ஒத்துழைப்பு மூலம் பாதுகாப்பு ஒத்துழைப்பை மேம்படுத்த எடுக்கக் கூடிய நடவடிக்கைகள் குறித்தும் அவர்கள் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டனர்.

இலங்கையின் தேசிய பாதுகாப்பை உறுதி செய்வதில், குறிப்பாக பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகள், கடல் சார் பாதுகாப்பு சவால்கள் மற்றும் அவசரகால பேரிடர் சூழ்நிலைகளுக்குப் பதிலளிப்பதில் இந்தியாவின் அசைக்க முடியாத ஆதரவை இந்திய உயர் ஸ்தானிகர் உறுதிப்படுத்தினார்.

இந்தியா இன்றுவரை வழங்கி வரும் தொடர்ச்சியான ஆதரவுக்கு பாதுகாப்புச் செயலாளர் தனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டார். மேலும் பிராந்தியத்தில் ஸ்திரத்தன்மை மற்றும் பாதுகாப்பை உறுதி செய்வதில் இந்திய - இலங்கை பாதுகாப்புக் கூட்டாண்மையின் முக்கிய பங்கையும் உறுதிப்படுத்தினார்.

இந்த நிகழ்வைக் குறிக்கும் வகையில் இரு தரப்பினருக்கும் இடையே நினைவுப் பரிசுகள் பரிமாறிக் கொள்ளப்பட்டன. பாதுகாப்பு அமைச்சின் இராணுவத் தொடர்பு அதிகாரியும் இந்தக் கலந்துரையாடலில் இணைந்து கொண்டார். (ந-7)






































Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

உரும்பிராய் பலாலி வீதியில் 90 அடி முகப்பாகக் கொண்ட 4 பரப்புக் காணி விற்பனைக்கு. கடைத் தொகுதிகள் அமைக்க உகந்த இடம்.

**077 275 2115**
**076 796 0056**

(3353)

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள BIE XXX இலக்க Wego மோட்டார் சைக்கிள் மற்றும் பெண்களுக்கான Lumala துவிச்சக்கரவண்டி ஆகியன உடன் விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு:
**070 490 9483**

(3358)

## பிரத்தியேக மற்றும் குழு வகுப்புக்கள்

கணிதம் மற்றும் விஞ்ஞான பாடங்கள்
(ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழி மூலம் கற்பிக்கப்படும்.)
தரம் 6 முதல் 11 வரை
**சி.வினோஜன்**
076 485 5392, 077 900 7597

(3363)

## வீட்டுடன் காணி விற்பனைக்கு

கல்வியங்காடு சந்தியிலிருந்து 100m தூரத்தில் றோட்டுக்கரை வீடும் காணியும் (1 பரப்பும் 2 ½ குளியும்) நல்ல தண்ணீர் கிணற்றுடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு :
**077 229 4985**

(3343)

## காணி விற்பனைக்கு

பொஸ்கோ பாடசாலைக்கு முன்பாக சோமசுந்தரம் அவெனியுவில் 3.5 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு: **076 342 4705**

(3342)

## உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
**V2 TRAVELS**

எமது கிளைகள்
- கிளிநொச்சி
- சுன்னாகம்
- சாவகச்சேரி
- மானிப்பாய்
- நெல்லியடி
- பருத்தித்துறை
- திருகோணமலை
- வல்வெட்டித்துறை
- கோப்பாய்
- புத்தூர்
- பண்டத்தரிப்பு
- சங்கானை
- கொழும்பு

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com

(C-2221)

## காணி விற்பனைக்கு

கல்வியங்காடு. புதிய செம்மணி வீதியில் 2 பரப்புக் காணி (குழாய் கிணற்றுடன்) விற்பனைக்குண்டு.
- கல்வியங்காட்டு சந்தியிலிருந்து 350 மீற்றர்
- நல்லூர் கந்தசுவாமி கோவிலிலிருந்து 1.7 Km

**077 185 4870**
**078 567 0771**

(3362)

## மணிவிழா வாழ்த்து

### திரு. பேதுருப்பிள்ளை நாகேந்திரன்



யாழ்ப்பாணம் பொதுசன நூலகத்தில் எம்முடன் 20 வருடங்களுக்கு மேலாகச் சேவையாற்றி 08.02.2025 இன்று தனது 60 ஆவது அகவையில் ஓய்வு பெற்றுச் செல்லும் திரு.பேதுருப்பிள்ளை நாகேந்திரன் அவர்களின் அளப்பரிய சேவையை உளமார வாழ்த்துவதோடு அவர் தனது ஓய்வுக் காலத்தில் சீரும் சிறப்புடனும் உடல் உள ஆரோக்கியத்துடனும் இருக்க எல்லாம் வல்ல இறைவனை வேண்டி வாழ்த்தி நிற்கின்றோம்.

(3351)

வாழ்த்துவோர்:
ஊழியர் நலன்புரிச் சங்கம்
பொதுசன நூலகம், யாழ்ப்பாணம்.

Best Wishes

## UK & CANADA VISA

- 100% உத்தரவாதத்துடன் செய்து தரப்படும்.
- Swiss Visa
- France Visa
- German Visa
- Norway Visa
- அனைத்து நாடுகளுக்குமான விசா சேவைகள் மிகக் குறைந்த செலவில்

**Exponet Overseas consultant**
No-125, Arasady Road, Jaffna.
071 415 0995
021 435 5113

(C-2220)

## காணி விற்பனைக்கு

தனங்கிளப்பு A32 பிரதான வீதி ஓரமாக 21 பரப்பு வயற்காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு: **076 342 4705**

(3342)

## STS HOSPITAL

A Passion for Caring

### ORTHODONTICS TREATMENTS

**பல் முக சீராக்கல் சிகிச்சைகள்**



எமது STS வைத்தியசாலையில் பல்முக சீராக்கல் சத்திர சிகிச்சை நிபுணர்

**Dr. P.Sathiyakumar**
Consultant Orthodontist

அவர்களிடம் தொடர்ந்தும் சிகிச்சைகளை பெற்றிடுங்கள்
ஆலோசனைகளைப் பெற பதிவுகளை மேற்கொள்ளுங்கள்

(3360)

பதிவுகளுக்கு
021 222 6600 / 021 222 6611

இல 130,முதலாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.

## வேலையாட்கள் தேவை

குஞ்சர் கடை கொலின்ஸ் விளையாட்டு மைதானத்திற்கு முன் இயங்கும் நயந்திக குடிநீர் விற்பனை நிலையத்திற்கு வேலையாட்கள் தேவை.

**076 651 0180**

(C-2215)

## மணமகள் தேவை

1991.12.06 விருட்சிக ராசி கேட்டை நட்சத்திரம் சூரியன், செவ்வாய் இல் பிறந்த (நாதஸ்வரம்) மணமகனுக்கு மணமகள் தேவை

மேலதிக விபரங்களுக்கு:
**0777 304 156**

(3311)

## ஜெயக்குமார் திருமணசேவை

ஐரோப்பாவிலுள்ள சூரிய செவ்வாய் உடைய மணமகனுக்கு A/L படித்த பெண் வேண்டும். மேலும் ஐரோப்பாவிலுள்ள மணமகளுக்கு பல்கலைக்கழகம் முடித்த மணமகன் தேவை. பெண் (1993, 1995, 1991, 1997) உண்டு.

(3347)

009 476 475 2219 (German)
077 023 7639 (Sri Lanka), 004 917 417 89740 - Whatsapp

## காணி விற்பனைக்கு உண்டு

**யாழ்ப்பாணம் பலாலி றோட் ஊரெழுவில் 2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில் 20 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.**

- பலாலி றோட் ஊரெழுப் பிள்ளையார் கோவில் வடக்கு வீதியில் இருந்து 300 m
- பலாலி புன்னாலைக்கட்டுவன் சந்தியில் இருந்து சுன்னாகம் செல்லும் பிரதான வீதியில் இருந்து 300 m இருவழிப் பாதை கொண்டது.
- நல்ல தண்ணீர் ஊற்று, சிவப்பு மண், நல்ல சூழல், வீடுகள் அமைப்பதற்கு நல்ல அமைவிடம்.

தொடர்புகளுக்கு :
**077 623 4204, 076 755 8606**

(3365)

## Happy Supermarket - உரும்பிராய்

| | | |
|---|---|---|
| 1Kg வெள்ளைச் சீனி | - 224/= | |
| 1Kg சிவப்பு பருப்பு | - 269/= | |
| 1Kg றவை | - 282/= | |
| 1Kg Prima கோதுமை மா | - 159/= | |
| 1Kg சம்பா (உள்நாடு) | - 240/= | |
| 1Kg சிவப்பு கௌப்பி | - 660/= | |
| 1Kg பயறு | - 699/= | |
| 1Kg வெள்ளை உளுந்து | - 760/= | |
| 1Kg கடலை | - 475/= | |
| 10Kg விஜிதா | - 2720/= | |
| 1Kg கீரிச் சம்பா | - 255/= | |
| 1Kg தீட்டல்ப் பச்சை அரிசி | - 250/= | |
| 400g லக்ஸ்பிறே | - 975/= | ~~1050/=~~ |
| 400g நெஸ்டமோல்ட் | - 735/= | ~~780/=~~ |
| 01 அங்கர் யோக்கட் | - 50/= | ~~80/=~~ |

400g Anchor
999/=
~~1050/=~~



1Kg சன்லைட் பவுடர் ரோஸ்
340/=
~~380/=~~



தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு Facebook:- happy basket.lk இனை நாடவும்

பலாலி வீதி,
உரும்பிராய் சந்தி.

(819)

Happy Supermarket
0777 8080 30

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் ... முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.02.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org